


# கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி

## வரசித்தி விநாயகர் புனராவர்த்தனப் பிரதிஷ்டா

# மகா கும்பாபிஷேக மலர்

## 2002

255.22
வரசி
SL IPR

கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு
திரு/திருமதி/செல்வி
ஏ. லாவண்யா
அவர்கள் நன்கொடையாக அளிக்கப்பட்டது
திகதி 18/10/2004

# வரசித்தி விநாயகர்



## கொ/இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி

**கொழும்பு - 04**

நூலகம்

கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
வரசித்திவிநாயகர் புனராவர்த்தன பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேக மலர்

ஆலோசகர் :

திருமதி .ரூபவதி சிவகுருநாதன்
அதிபர்

இதழாசிரியர்கள்:

திருமதி த.இராஜதுரை
திருமதி அ.பிரபாகரன்

34503

வெளியீடு:
கொ / இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
மலர்க்குழு
28.10.2002

உ

கணபதி துணை

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரசன்ன வதனம் த்யாயேத்
சர்வ விக்னோப சாந்தயே!


வெண்மையான ஆடை அணிந்தவரும்,
நன்மையைக் கொடுப்பவரும்
சந்திரனுடைய நிறம் உடையவரும்
நான்கு கைகளை உடையவரும்
நல்ல சாந்தி உடைய முகத்தை உடையவரும்
எல்லா இடையூறுகளையும் நீக்குபவருமாகிய
விநாயகரைத் தியானிக்கிறேன்.

# விநாயகர் வணக்கம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடி கணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.



# பிரணவப் பொருளான
# விநாயகப்பெருமானின்
# எழில்மிகு திருக்கோலங்கள்

எம்பெருமான் அடியார்களின்
பொருட்டு முப்பத்திரண்டு திருவுருவங்கள்
எடுத்தார் எனப்புராணங்கள் கூறுகின்றன.
எனவே

அடியார்கள் நலன் கருதி
அந்தத் திருவுருவங்களைப் பாடல்
மூலம் ஆக்கம் செய்து அடுத்து பக்கத்தில் தருபவர்

**திருமதி. தவேஸ்வரி - இராஜதுரை**
(ஆசிரியை)
கொ / இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி ,
கொழும்பு ~04

உ

இராகம்: மோஹனம் | தாளம் : ஆதி

ஓம் விக்ன விநாயகனே சரணம்
ஓம் விக்ன விநாயகனே சரணம்
ஓம் விக்ன விநாயகனே சரணம்

**பால** கணபதியே **தனம்** தரும் கணபதியே
**பக்தி** கணபதியே சரணம் ஐயா,
உன்பதம் சரண் அடைந்தேன் காத்தே அருள்புரிவாய்
ஓங்கார வடிவழகே சரணம் ஐயா!

**வீர** கணபதியே **சக்தி** கணபதியே
**கோஜ** கணபதியே சரணம் நாதா,
நான் சரண் அடைந்தேன்
கொண்டே அருள் புரிவாய் - மூலப் பொருளே

**சித்தி** கணபதியே **முத்திஷ்ட** கணபதியே
**விக்ன** கணபதியே சரணம் ஐயா
உன்பாதம் பணிந்து நின்றேன்
இரட்சித் தருள் புரிவாய்
மூஷிக வாகனனே சரணம் ஐயா!

**சுப்ர** கணபதியே **ஹேரம்ப** கணபதியே
**வெற்றி** கணபதியே வேதம் ஐயா,
பக்தியில் திளைத்தேன் பாவம்
போக்கிடுவாய் மூலப்பொருளே!

**இதய** கணபதியே **மகா** கணபதியே
**நிருத்த** கணபதியே சரணம் ஐயா
உனைத் தேடி நின்றேனே குறையைத் தீர்த்திடுவாய்
ஐங்கரநாயகனே சரணம் ஐயா.

**ஊர்த்துவ** கணபதியே **ஜெரட்சர** கணபதியே
**வரமருள்** கணபதியே வருவாய் ஐயா
போற்றியே சரணடைந்தேன்
நாவில் வந்திடுவாய், நாவின் ஒளியே.

**பிரியட்சர** கணபதியே **சுப்ரப்பிரசாத** கணபதியே
**அந்த** கணபதியே அருள் தருவாயே
ஆனைமுகன் நீயே ஆறுதல் அளித்திடுவாய்
நீயே வந்திடுவாய் சரணம் ஐயா.

**ஏகனந்த** கணபதியே **திருஷ்டி** கணபதியே
**உத்தண்ட** கணபதியே உன்னைத் துதித்தேன்
உன்பதம் சரணடைந்தேன் என்னைக் காத்திடுவாய்
சக்தியின் புதல்வா

**தினமோட்ச** கணபதியே **தும்பி** கணபதியே
**துதிமுக** கணபதியே துதிப்பேன் உனையே
துதிக்கையே சரணம் ஐயா துன்பம் தீர்த்திடுவாய்
ஏகனந்தனே சரணம் ஐயா.

**திரிமுக** கணபதியே **சிம்ம** கணபதியே
**யோக** கணபதியே உன்பதம் பணிந்தேன்,
உண்மையாய் வருவாய் அருளும் தருவாய்
ஆனந்த கணபதியே!

**துர்க்கா** கணபதியே **சங்கடஹர** கணபதியே
**சங்கார** கணபதியே யோகம் அருளிடுவாய்,
யோதியைச் சரணடைந்தேன் நாதமாய் வருவாயே
நானே மகிழ்வேனே அருள் தருவாயே!

உன்னருள் வணங்கிடவே
முப்பதுடன் இரண்டுருவை
உவந்தே கொண்டாய் நீயே உண்மை
மக்களின் நலனில் மகிழ்ந்தே அருள்வாய் சர்வ கணபதியே!

ஔவையார் அருளிச் செய்த

# விநாயகரகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
ஐந்து கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெஞ் ஞான
அற்புதன் நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தெ னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிப் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணை யினிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தி னுறுப்பையுங் காட்டி
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்மு மாக வினிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனத் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமு மில்லா மனோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே யருள் வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நினையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

# விநாயகர் கவசம்

வளர்சிகை பராபரமாய் வயங்கு விநாயகர் காக்க
வாய்த்த சென்னி
அளவுபடா வதிகசவுத் தரதேகம தோர்கடற்தாம்
அமர்ந்து காக்க
விளரற நெற்றியை யென்றும் விளங்கிய காசிபர் காக்க
புருவந் தம்மை
தளர்வின்மகோ தரர் காக்க
தடவிழிகள் பாலச்சந்திரனார் காக்க
கவின்வளரும் அதரங்கஜ முகர் காக்க
தாலங்கணைக் கரீடர் காக்க
நவில்சி புகம் கிரிசைசு தர்காக்க
நனிவாக்கைவி நாயகர்தாங் காக்க
அவிர் நகை துன்முகர்க் காக்க
அள்ளெழிற் செஞ்செவிபாசபாணி காக்க
காமரூப முகந்தனைக் குணேசர் நனிகாக்க
களம்கணேசர் காக்க
வாமமுறுமிரு தோளும் வயங்குகத் தபூர் வசர்
தாம்ம கிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமலை விக்கின விநாயகன் காக்க
இதயத் தன்னை
தோமகலுங் கணநாதர் காக்கப்
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினகரன் காக்க
விளங்கி லிங்கம் வியாளபூடணர் தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர் காக்க
சக னத்தை யல்லல்
உக்க கணபன் காக்க
ஊருவை மங்டகள மூர்த்தியுவந்து காக்க
தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்க
விருபதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசாதனனர் காக்க
முன்கையைவணங்குவார் நோய்
ஆழ்தரச் செய்யா சாபூகர் காக்க
விரல் பதுமவந்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினிப் புத்தீசர் காக்க
அக்னியிற் சித்தீசர் காக்க
புத்திரர்தெ ன்திசை காக்க
மிக்கநிருதி யிற்கணேசுரர் காக்க
விக்கினவர்த் தனர் மேற்கென்னுந்
திக்கதனிற் காக்க
வா யுவிற் கசகன்னர் காக்க திகழ் உதீசி
தக்கநிதிபன் காக்க
வடகிழக்கி லீசாந்தனரே காக்க
ஏகந்தர் பகன்முழுதுங் காக்க

விரவினுஞ்சந்தியிரண்டும் மாட்டும்
ஓகையின் விக்கின் விருது காக்க
இராக்கதர்பூத முறுவேதாள
மோகினி பேயிவையாதி யுதர்த்திறத்
தால் வருந்துயரு
முடிவில்லாதவேகமுறு பிணிபலவும் விலக்கு
பாசாங்குசார் தாம்விரைந்து காக்க
மதிஞானம் தவம்தானய் மனமொழி புகழ்குலம்
வண்சாரீரமுற்றும்
பதிவான தனம்தானீ யங்கிரகம் மனைவி மைந்தர்ப
யின்ட் பாதிக்
சதியாவுங் கலந்து சர்வாயுதர் காக்க
காமர் பவுத்திரர் முன்னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச ரெஞ்ஞான்றும்
விரும்பிக் காக்க
வென்ற சீவி தங்கபிலார்க் காக்க
கரியாதியெல்லாம் விகடர் காக்க
என்றிவ்வாறிது தனைமுக் காலமுமோ
திடினும்பா லிடையூ றென்றும்
ஒன்றுறா முனிவரவர்க்கா
ளறிமின்கள் யாரொருவ
ரோதினாலு மன்றவாங் கவாதேகம் பிணியறவச்
சிரதேகமாகி மன்னும்

(விநாயகர் கவசம் முற்றிற்று)

**யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர் எம்.ஏ.**
**(அகில இலங்கை சமாதான நீதிவான்)**
**முன்னாள் விரிவுரையாளர், அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் பலாலி**
**அதிதி விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்**

விநாயகர் துணை

# கொழும்பு ஸ்ரீ இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் ஸ்ரீ விநாயாகப் பெருமான் ஆலயக் கும்பாபிஷேக வாழ்த்து

1. ஞானக்க ணபதியின் மோனக் கழல்
ஞாலமதில் என்றென்றும் துதித்தி டவே
ஞானந்த னைஅருள்வான் கலைத ருவான்
ஞானியரும் போற்றுவிநா யகப்பெ ருமான்.
வானளாவும் மாடஞ்சூழ் கொழும்பு நகர்
வளரிராம நாதனிந்து மகளிர்கல் லூரி
கானமெழு கலைகல்வி அருள் தரவே
கணபதிகல் லூரியிலே அமர்ந்தான் நன்றே.

2. ஔவையவள் செந்தமிழில் அகவல் பாட
ஆனந்தம் கொண்டவனை முத்திப் பேறாம்
திவ்வியஞ்சேர் பேரின்பம் அனுப விக்கத்
துதிக்கையால் ஸ்வர்கலோகம் தூக்கி வைத்தான்
செவ்வடிவேல் முருகனவன் வள்ளிப் பெண்ணை
சேர்வதுவை செய்திடவே ஆனை ஆனான்
பவ்வியஞ்சேர் கொழும்புராம நாதன் மகளிர்
பயிலும்இந்துக் கல்லூரிக்கோ யில்கொண் டானே!

3. கல்விகலை விருத்திக்குப் பக்தி ஒன்றே
காசினியில் ஆதாரம் எனும்பே ருண்மை
நல்விதஞ்சேர் உணர்வுநல்க இந்து மகளிர்
நற்கல்லூ ரிக்கோயில் நுங்கு மர
வல்லஅருள் ஆலயத்தைச் சமைத்து ஆங்கே
வாரணனை அமர்த்தியே குடமு ழுக்கு
நல்லவணம் கும்பாபி ஷேகம் செய்தார்
நல்லிந்து மகளிர்கல் லூரி வாழி!

"சுபம்"

மஹாவித்துவான்
யாழ்ப்பாணம்
**பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர் எம்.ஏ.**





# வரசித்தி விநாயகர் ஸ்துதி

இராகம் :- ஹம்சத்வனி

தாளம் : ஆதி

பல்லவி

வரசித்தி விநாயகனே வரம் தருவாய்
வல்லவனாய் நானும் வையத்தில் வாழ்ந்திடவே

(வரம்)

அனுபல்லவி

ஏகநந்தனே ஹேரம்ப விநாயகனே - உன்
பாதார விந்தத்தினைப் பணிந்தே துதித்தேன்

(வரம்)

சரணம்

ஏழலகும் உன் புகழ் பாடியே துதிப்பர்
ஏனையா என்னிடமும் ஒரு மாற்றம் தந்தாய்
இராமநாதன் இந்துவில் மகளிர்க்கருள் புரிவாய்
பாதக் கமலத்தைப் பாரோர்க்கும் நல்கிடுவாய்


(வரம்)

கள்ளமில்லாமல் வணங்கும் அடியவன் எனக்கு
காட்சி தந்தே உளக் கருணை புரிவாய்
உள்நின்ற ஒளியே ஊனப்பிறவி எனை
உன்னருள் தந்தே ரட்சித்தருள் புரிவாய்

(வரம்)

இயற்றியவர்
திருமதி. த .இராஜதுரை

# வாழ்த்துச் செய்தி



இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள வரசித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

கொழும்பு நகரில் அமைந்துள்ள சிறந்த பள்ளிகளில் ஒன்றுதான் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி. தவிர இப்பள்ளியில் நடைபெறும் தியானப்பயிற்சி வேறெந்த பள்ளியிலும் காண முடியாதது.

மனதின் ஆற்றல்களைத் தேவையற்ற விடயங்களில் வீணாக்காது, அவற்றை ஒருங்கிணைத்து படிப்பில் செலுத்துவதற்கு, தியானம் ஒரு சிறந்த பயிற்சியாக மாணவர்களுக்கு உதவும் என்பதில் ஐயமில்லை.

எனவே இப்பள்ளியின் சிறந்த அம்சமான இத்தியானப் பயிற்சியை மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளல் அவசியம்.

அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்!

சுவாமி ஆத்மகனானந்தா
இராமகிருஷ்ணமிஷன்
40, இராமகிருஷ்ண றோட்,
வெள்ளவத்தை

# புதிய கதிரேசன் கோயில்
# பிரதம சிவாச்சாரியாரின் ஆசிச்செய்தி



சைவர்களாய்ப் பிறந்திட்ட அனைவருக்கும் இறைவன் அருளால் கிடைக்கத்தக்க பெறும் பேறு கும்பாபிஷேக தரிசனமாகும். திருவானைக்காவிலே வெண் நாவல் மரத்தின் கீழ் இருந்த சிவலிங்கப் பெருமானுக்குத் தன் வாய் நூலாற் பந்தர் அமைத்த சிலந்திக்கு அடுத்த பிறப்பு கோச் செங்கட் சோழன் என்ற அரச பிறப்பாகும். வாய் நூலாற் பந்தர் அமைத்த சிலந்திக்கு அரசப்பேறு எனில் கற்களினால் ஆலயம் அமைப்பவர்களின் பேறு சொல்லும் தரமன்று.

மேலும் பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் வீற்றிருக்கும் வரச்சித்தி விநாயகப்பெருமானுக்கு புதிதாக ஆலயம் 1989ம் ஆண்டு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோவில் அறங்காவலர் திரு. இராம.பழனியப்பச்செட்டியார் அவர்களால் நிர்மாணிக்கப்பட்டது. பின்னர் 2002ம் ஆண்டு தை மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு அதே ஆண்டு ஆவணித்திங்கள் 26ம் நாள் (11.09.2002) கும்பாபிஷேகம் நடைபெற்று, தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றுது. இச் செயற்கரிய கைங்கரியத்தைச் செய்துமுடித்த பெருமை அதிபர் திருமதி ரூபவதி சிவகுருநாதன் அவர்களுக்கும் அவருடன் முன் நின்று ஒத்தாசைகள் புரிந்த பெரியோர்களுக்குமே சாரும் என்பது வெள்ளிடைமலை.

மேற்படி ஆலயத்தில் அடுத்துவரும் பன்னிரண்டு ஆண்டுகளில் நடைபெற இருக்கும் கும்பாபிஷேகத்தினையும் இவர்களே முன்னின்று நடாத்தவும் மற்றும் பாடசாலையில் உள்ள சிறுமிகளுக்கும் ஆசிரியர்கள் மற்றைய உத்தியோகத்தர்களுக்கும் வரசித்தி விநாயகப் பெருமானின் நித்திய பரிபூரண கிருபாகடாட்சம் கிடைக்கும் என்று ஆசி கூறுகின்றேன்.

ஆகமசூடாமணி
சிவாகம சிரோண்மணி
**சிவஸ்ரீ ஜெ.நாகராஜா குருக்கள்**
பிரதம சிவாச்சாரியார் (புதிய கதிரேசன் கோயில்)
அகில இலங்கை சமாதான நீதவான

# கல்வியும் வாழ்வும் சிறக்க வாழ்த்துகின்றேன்



இறைவன் அனுகிரகம் இருக்கும் காரியம் யாவும் செவ்வனே நிறைவுபெறும்.

மாணவர்களுக்கு கல்வியையும் கலைகளையும் பயிற்றுவிக்கும் கல்லூரியும் ஆலயம் போன்றதே. அவ்வாலயத்துக்கு தினம் வந்துபோகும் மாணவர்களுக்கு அவர்களின் கல்வி நடவடிக்கைகள் சித்திபெற ஆண்டவன் அருள் மிகமிக அவசியம். இராமநாதன் இந்து தமகளிர் கல்லூரியில் இறைவன் அருளைப் பெறுவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் பிள்ளையார் ஆலயத்தின் குடமுழுக்கு விழாவையொட்டி சிறப்பு மலர் வெளிவர இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவிகளுக்கும் கடமையாற்றும் சகலருக்கும் பிள்ளையார் திருவருள் இனிதே கிடைத்து அவர்கள் கல்வியும் வாழ்வும் சிறக்க வாழ்த்துகிறேன்.

**எஸ். தில்லைநடராஜா**
மேலதிகச் செயலாளர்

மனித வள அபிவிருத்தி,
கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு,
ஹீஇசுருபாய,,
பத்தரமுல்ல.
*2002.10.03.*

# கல்லூரியின் போஷகர்
# திரு.டி.எம்.சுவாமிநாதன்
# அவர்களின் ஆசிச்செய்தி



ஆலயம் என்பது ஆன்மா ஒருமைப்பட்டுள்ள இடம் எனப்படும். தெய்வம், கடவுள் என்ற சொற்கள் தொல்காப்பியம் என்ற பழந்தமிழ் இலக்கண நூலிலும் இடம்பெற்றுள்ளன. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு ஆகிய நூல்களிலும் தமிழருடைய கடவுட் கொள்கைகள் ஆங்காங்கே புலப்படுகின்றன. இவ்வாறாக அக்காலம் தொட்டு வழிபாடு இருந்திருக்கின்றது என்பது அறியப்படுகின்றது. சகல காரியங்களையும் விக்கினங்களின்றிச் செய்து முடித்திட விநாயகனை வழிபடல் வேண்டும் என்பது ஐதீகம். வரசித்தி விநாயகர் கோயில் கொண்டருளும் பொருட்டு கொ/ இராமநாதன் இந்து மகளீர் கல்லூரி முன்றலில் அமைக்கப்பட்டமையானது சிறப்பானது. இந்த வரசித்திவிநாயகர் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்குத் தன் திருவருளை அள்ளி வழங்கி அனுக்கிரகம் புரிவானாக.

டி.எம்.சுவாமிநாதன்

# அதிபரின் ஆசிச்செய்தி



சகல காரியங்களையும் இனிதே நிறைவெய்த வல்லமையளிக்கும் வரசித்தி விநாயகனின் பாதாரவிதந்தத்தினைப் பணிந்து இந்த ஆசிச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ் வெய்துகின்றேன்.

எமது கல்லூரியானது 1981ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் கல்லூரி வளவினுள் ஆசிரியர் குழாமும், மாணவிகளும் விநாயகரை வணங்கி எக்காரியத்தையும் தொடங்குவது நன்று என எண்ணி இவ்வரசித்தி விநாயகருக்கான ஆலயம் ஒன்று ,989ல் அமைத்து கும்பாபிஷேகமும் நடைபெற்றது. ஆயின் நல்லவற்றையே வழங்கி வந்த இந்த வரசித்தி விநாயகரின் அமைவிடம் மிகவும் குறுகியதாகவும், ஒடுங்கியதாகவும் இருந்ததால் தினசரி பூசை செய்ய முடியாத நிலை காணப்பட்டது. எனவே இக் கோயிலைப் புனருத்தாரணம் செய்ய வேண்டும் என்னும் எண்ணம் மேலோங்கியது. எனவே இவ் ஆலயத்தினை இட அமைப்பைப்பிற்கேற்ப சற்று பெரிதாக்கியும், உயரமாக்கியும் சிவாச்சாரியார் நின்று எம் பெருமானுக்குப் பூஜை செய்யும் வண்ணமாக அனைத்து சுவாமிகள், பெரியோர்கள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், ஆசிரியர் உதவியுடனும் நல்லாசியுடனும் அமைக்கப் பெற்றுக் கும்பாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் நடைபெற்று வரும் வேளை இக்கும்பாபிஷேக மலரினையும் வெளியிடும் வண்ணம் ஆசை கொண்டு இம் மலரினை வெளியிடுகின்றோம்.

எல்லாம் வல்ல விக்கினங்கள் யாவும் தீர்த்து வைக்கும் வரசித்தி விநாயகர் எங்களையெல்லாம் மேன்மேலும் வாழ்த்தி வழிநடத்திச் செல்வான் என்பதில் ஐயமில்லை.

திருமதி.ரூபவதி சிவகுருநாதன்
**அதிபர்**
**கொ/இராமநாதன் இந்துமகளீர் கல்லூரி**

# ஆசியுரை



''திருவாக்கும் செய் கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடம் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுக்தோனைக்
காதலால் கூப்புவர் தம்கை''

சைவ மக்களின் வாழ்க்கையில் பிள்ளையார் வழிபாடு முதன்மையானது. எந்தக் கருமத்தையும் இப்பெருமானை முன்னிட்டு ஆரம்பிப்பது எமது சமய மரபு. சந்திகள், சாவடிகளிலும், பாடசாலைகள், வைத்தியசாலைகள் ஆகிய இடங்களிலும் மற்றும் சைவத் திருக்கோயில்கள் அனைத்திலும் விநாயகப் பெருமானுக்கு சிறப்பு வழிபாடு ஆற்றி வருவதை நாம் காணுகிறோம்.

கல்வி என்று கூறும்போது அங்கு விநாயகருக்கே முதன்மை கொடுக்கப்படுகிறது. ஹீநற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலைஞானம் கற்குஞ் சரக்கன்று காண், என்பது திருவருட்பயன். இதனையொட்டியே பள்ளிக்கூடங்கள் தோறும் அரிச்சுவடி ஆரம்பிக்கும் போதும் ஹீஓம் கணபதியே நம, என்று பெரிதும் போற்றப்படுகின்றது. கணங்களுக்கெல்லாம் அதிபதியாய் இருப்பதனால் கணபதி என்றும் பெருமானின் நாமங்கள் பலவாறாகப் போற்றப்படுகின்றன.

இவற்றில் பிள்ளையார் என்பது குழந்தைக் கடவுள் என்பதை உணர்த்தி நிற்கிறது. கொழும்பு இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி கல்வி வளர்ச்சியிலும், பண்பாட்டுச் சிறப்பிலும் ஓங்கி நிற்பதை அறிஞர்கள் வாயிலாகக் கேட்டு மகிழ்ச்சியடைகிறோம். மேலும் மேலும் துரித கதியில் முன்னேறி மகளிர் நலனை சகலதுறைகளிலும் முன்னேற்ற வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை,
ஸ்ரீ லங்கா

# பிரதி அதிபர்களின் வாழ்த்துச்செய்தி

எமது இலங்கை மணித் திருநாட்டின் தலைநகரின் கண்ணே சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வண்ணம் பணியாற்றிவரும் தன்னிகரற்ற எமது இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் வரசித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு எய்துகின்றோம்.

எமது வரசித்தி விநாயகர் வேண்டியோருக்கு வேண்டிய வரம் நல்கின்ற பெருமான். இவரது ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து பெரிதாக்கியதன் மூலம் அர்ச்சகர் சிரமமின்றி பூஜை செய்யவும் பக்தர்கள் நிம்மதியாக வழிபடவும் வகை செய்ததுடன் மேலும் அழகுறவும் அமைத்திருக்கின்றனர். எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருள் எமது பாடசாலையைச் சார்ந்த அனைவருக்கும் மட்டுமின்றி ஆலயத்தை புனருத்தாரணம் செய்து உதவி புரிந்த ஸ்தபதி அனைவருக்கும் மற்றும் ஏனையோருக்கும் கிடைக்க அவனருள் வேண்டி அவன் தாள் பணிகினறோம்.

''மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்,,

இ.புஸ்பநாதன்
ப.வன்னியசிங்கம்
பிரதி அதிபர்கள்

# வாழ்த்துரை



பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் காவற்றெய்வமாகக் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ வரசித்தி விநாயகரின் கும்பாபிஷேகம் ஆவணித்திங்கள் இருபத்தாறாம் நாள் (11-09-2002) புதன்கிழமை பஞ்சமி திதியும் சுவாதி நட்சத்திரமும் கூடிய நல்லோரையில் மங்களகரமாக நிகழ்ந்ததை யாவரும் அறிந்ததே. அதைத் தொடர்ந்தும் 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று இறுதிநாளாகிய பூர்த்தி விழாவில் விநாயகர் அருளால் சங்காபிஷேகம் நிகழ்கின்றது. இன்று மலரும் கும்பாபிஷேக மலர் சமயக் குருமார், பெரியார்களின் ஆசிகளோடு அறிஞர்களின் கட்டுரைகளும் கொத்துக் கொத்தாகத் தாங்கிப் பூத்துக் குலுங்குகின்றது. அதற்கு என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். இக் கும்பாபிஷேகம் ஐங்கரனின் திருவருள் மகிமை யாலும், கடந்த 14 ஆண்டுகள் கல்லூரியுடன் சங்கமமாகி அதிபராகக் கடமையாற்றும் திருமதி. ரு. சிவகுரு நாதனின் திடசங்கற்பத்தாலும் தளராத ஊக்கத்தாலும் நிகழந்தது என்பதை மறக்க முடியாது. மறைக்க இயலாது அன்னாரின் தன்னமில்லாத சேவை கல்லூரிக்குத் தொடர்ந்து கிடைக்கவும், அவர் நோயற்று வாழவும் ஐங்கரன் திருவருள் பொழிவாராக.

தா. சிவசுப்பிரமணியம்
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சபை.



மலர்க்குழுவினர்

திருமதி த.இராஜதுரை(இதழாசிரியை), திருமதி இ.புஸ்பநாதன்(பிரதி அதிபர்), திரு தா.சிவசுப்பிரமணியம்(பாடசாலை அ.ச.செயலாளர்), திருமதி ரு.சிவகுருநாதன்(அதிபர்) செல்வி ப.வன்னியசிங்கம்(பிரதி அதிபர்), திருமதி கௌ.இரத்தினவேல்(பொறுப்பாசிரியை இந்து மன்றம்), திருமதி அ.பிரபாகரன்(இதழாசிரியை)

# இதழாசிரியர்களின் இதயநாதம்..

"கடமைகள் செய்யப்படுவது நன்று - அதுவும்
காலத்தால் அழியாதிருப்பது மேலும் நன்று"

எண்ணிய கருமம் இனிதே நிறைவெய்திட சர்வ சித்தியும் பொருந்திய விக்கினங்கள் தீரக்கும் விநாயகப் பெருமானை வணங்கி ஆரம்பித்தல் சித்தியைத் தரும் இதற்கிணங்க விநாயகர் எமது கல்லூரியின் வாயிலின் புறம் வரசித்தி விநாயகர் எனும் நாமம் கொண்டு 1989ல் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும், கல்லூரிப் போஷகரினதும், எமது கல்லூரி அதிபரினதும் முயற்சியுடன் அமர்ந்தார். நித்திய பூஜை செய்து, வாழ்க்கையில் ஈடேற இடவசதி மிகவும் குறைவாகவே இருந்தது. எனவே அதனைக் கருத்தில் கொண்ட எமது கல்லூரி முதல்வர் திருமதி.ரூபவதி சிவகுருநாதன் அவர்கள் சிவாச்சாரியார்களுடன் கலந்தாலோசித்து, கல்லூரியின் போஷகரின் ஆலோசனையையும் பெற்று, நிதியின் பற்றாக்குறையையும் விநாயகன் ஈடு செய்து கொள்வான், ஆயின் அவனை வணங்கிட அதற்கேற்றவாறு ஆலயம் அமையப் பெறல் வேண்டும் என்னும் அசாத்திய துணிவுடன் ஆலயத்தினை புனருத்தாரணம் செய்வதற்கான வழியை மேற்கொண்டார். எனவே சிவாச்சாரியார். பாடசாலை அபிவிருத்திச்சங்கம், ஆசிரியர்கள் பெற்றோர்கள் அனைவரின் வேண்டுகோளுக்கும் இணங்க அவரே விநாயகர் ஆலயம் அமைவதற்கான அடிக்கல்லையும் நாட்டி வைத்தார்.

இந்த வரசித்தி விநாயகரின் ஆலயமானது பெற்றோர், நலன்விரும்பிகள், ஆகியோரின் உதவிகள் ஒத்தாசையுடன் மிகவிரைவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு 11.09.2002 ல் கும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து (48) நாற்பத்தெட்டு நாட்கள் மண்டலாபிஷேம் நடைபெறுகின்ற இவ்வேளையில் கும்பாபிஷே மலர் ஒன்றினை வெளியிடுவது பொருத்தமானது என்றெண்ணி அனைவரின் ஆசியுடனும், விருப்புடனும் இம் மலரானது மலர்கின்றது.

மேலும் இக்கும்பாபிஷேக மலர் மலர்ந்து மணம் வீசிட எமக்கு ஆசியுரைகள், வாழ்த்துரைகள், கட்டுரைகள் யாவற்றையும் மனமகிழ்வுடன் தந்துதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும், வரசித்தி விநாயகர் ஆலயத்தினை அழகுற அமைத்து மகிழந்த ஆச்சாரியார்களுக்கும், ஆலயம் அமைப்பதற்குத் தேவையான பொருட்களையும், பண உதவிகளையும் தந்துதவிய பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், நலன் விரும்பிகள், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது மனம் கனிந்த நன்றிகள் - யாவற்றிக்கும் மேலாக எமது அதிபர் இப்பாரிய பொறுப்பினைச் சிரமேற்கொண்டு, மிகக் குறுகிய காலத்தில் முடித்ததோடமையாது கோவிலுக்குத் தேவையான சில பொருட்களையும் வழங்கி மகிழ்ந்தமை நன்றிக்குரியதும், பாராட்டிற்குரியதுமாகும். எனவே அவருக்கும் மலர்க்குழுவினரின் அன்பு நிறை நன்றிகள்.

இதனைவிட ஆலயவிடயமாகத் தேவையான நேரங்களில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைக் கூறி, வரசித்தி விநாயகரின் அருளைப் பெற்று வாழ்க்கையின் சகல சௌபாக் கியங்களையும் பெற்றுக்கொள்வோமாக!.

இதழாசிரியர்கள்

திருமதி.த.இராஜதுரை

திருமதி அ.பிரபாகரன்.

# தமிழகச் சௌராட்டிரரும் பக்தி இலக்கியமும்..

Dr.L.A.உமாமஹேஸ்வரி
விரிவுரையாளர்
Dr.M.G.R.Janaki Arts & Science College for women, Chennai

தமிழகச் சௌராட்டிரர் தமிழைத் தமது இரண்டாவது தாய்மொழியாகக் கற்க முற்பட்டதுடன், அவ்வினிய மொழியில் பற்பல இலக்கியங்களையும் படைக்கலாயினர். பதினேழாம் நூற்றாண்டு முதல் தமிழகத்தைத் தமது தாயகமாகக் கொண்டு வாழ்ந்தாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் தமிழ் இலக்கியப் படைப்பு குறித்த எண்ணம் இம்மக்களிடையே தோன்றியுள்ளது. தொடக்க காலத்தில் பக்தி இலக்கியம் மட்டுமே படைத்து வந்த நிலைமாறி, புதிய இலக்கிய வகைகளான நாவல் புதுக்கவிதை படைப்பிலும் தற்பொழுது தமக்கென நிலையான ஓர் இடத்தினைக் கொண்டுள்ளமை குறிக்கத்தக்கது. சௌராட்டிரர் படைப்பில் அமைந்துள்ள பக்தி இலக்கியத்தினை மட்டும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

இலக்கிய வகைகள்: கண்ணி, காவடிச் சிந்து, கிளிக் கண்ணி, கீர்த்தனை, சித்திரக்கவி, திருப்பள்ளி எழுச்சி, விருத்தம், வினாவிடை எனும் அடிப்படை யில் பக்தி இலக்கியத்தினை வகைமைப்படுத்தி நோக்கலாம்.

1. கண்ணி: பல்லவி, அனுபல்லவி இன்றிப் பாடப்படும் இசைப்பாட்டு வகையான கண்ணினியின் வடிவில் சௌராட்டிரச் சான்றோர் பலர் கவிகள் இயற்றியுள்ளனர்.

ஜீவாத்மா கோடிகளெல்லாம் ஸ்திரிப் பிராய மென்றறிவாய்
தேவர்களைப் படைத்த அயன் ஜெனன விடந்தெரிவாய்

"சௌராட்டிர ஆழ்வார், என இவ்வின மக்களால் அன்புடன் அழைத்துப் போற்றத்தக்க இடத்தினைப் பெற்றுள்ள நடன கோபால நாயகி சுவாமிகள் பக்தி இலக்கியத்திற்கு வித்திட்டவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஆவார். நாயக - நாயகி பாவத்தில் பக்திப் பொருண்மை புலப்பட இவர் இயற்றியுள்ள கண்ணிகளும், கீர்த்தனைகளும் சிறப்பு வாய்ந்தவையாகும்.

நானானேன் தானானேன் நானானேன் தானானேன்
ஜானாஎன எண் ஜானுடல் அருள் கண்ணா சாகாது நாதராலே
(நமனை வென்ற நாயகி, ப. 58) என்றும்,

மூச்செறிய லாச்சுதெடி முகுந்தனை நினைத்து
காட்சி கொடுக்க வருவானோ கண்ணன் நினைத்து
பிழைக்க வருவானோ வெம்பெருமானென் பாலோடி
வளைத்து விடாதெனை மயக்கி வஞ்சம் செய்தானேடி (மேலது., ப.62)

என நாயக - நாயகி பாவத்தில் பற்பல கண்ணிகள் இயற்றியுள்ளமை சுட்டத்தக்கது. விட்டலதாஸ் சுவாமிகள் இயற்றியுள்ள கண்ணிகள் "உலக நிலையாமை", யினை எடுத்துக்காட்டி அறிவுறுத்தும் பாங்கில் (விட்டல நாம சங்கீர்த்தனை., ப-4) அமைந்துள்ளன.

2. காவடிச்சிந்து: "காவடிச் சிந்து", மெட்டில் அமைந்த தொ.ரா. பத்மநாபய்யர் பாடல் கீதையின் பெருமைதனை விளம்புகிறது.

*With Best Compliments From:*

**Komy Lite Co.**
124/7, 1st Floor, Maliban Street, Colombo 11
Tel: 347783, 713747

**Saimin Electricals**
17, Orrs Hill Centre Road, Trincomalee.
Tel: 026-22078

கீதையை நம்பினோர்க்குக் கேடொன்றுமில்லையென்ற
கிருட்டிணன் வார்த்தை சத்தியம் - ஓதை நம்பினால்
எய்திடும் வாழ்வே நித்தியம் - கடைப்பிடித்தால்
பிறவிப் பிணிக்காம் வைத்தியம் (கீதாகிதம்., ப-7)

கீதையினை முறையாகப் பயில்வதன் மூலம் வாழ்வின் உன்னத நிலையை அடைய முடியும் என எடுத்துக் காட்டும் இவரிது பாடல்கள் எளிய மெட்டில் அமைந்துள்ள காரணத்தினால் ``கீதாபவனம்'' எனும் இவரது நிலையத்தில் நாளும் குழந்தைகள் பாடிப் பரவி வருகின்றனர்.

3. கிளிக்கண்ணி: காவடிச் சிந்து மெட்டில் மட்டுமன்றி ``கிளிக்கண்ணி'',யாகவும் அமைந்துள்ள பாடல், பின்வருமாறு:

கீதை படித்த பேர்க்கு கீதையைக் கேட்ட பேர்க்கு
கீதையுரைத்த பேர்க்கு - கிளியே
கேடொன்று மில்லையடி

ஆறு மூன்றத்தியாயம் ஆராய்ந்துரைத்தடி ஆதுமாமிர்த்தமடி - கிளியே அள்ளிப் புசிப்பாயடி (கீதாகீதம்., ப.1) என்கிறது.

4. கீர்த்தனை: சௌராட்டிர் மொழியில் எண்ணற்ற கீர்த்தனைகளைப் பல பெரியோர் இயற்றியுள்ள அளவிற்கு தமிழில் இயற்றவில்லையெனினும், நடன கோபால நாயகி சுவாமிகள், விட்டலதாஸ் சுவாமிகள், அம்மையப்பன் கொண்டில் பாகவதர், தொ.ரா.பத்மநாபய்யர், சஞ்சீவி. ந.வெங்கடராமபாகவதர், வேணுகோபால் நாசர், மீனாட்சி சுந்தரதாசர் ஆகியோர் கீர்த்தனை இயற்றியுள்ளவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

கிடைக்குமோ மானிட ஜென்மம் கிடைத்ததற்கு
அடைவது இதுதானோ சொல்வீர்
முடவனாய்ப் பிறந்தாலும் தடையியிலை மோட்சடத்திற்கு
முகுந்தனுடைய நாமம் சொல்வீர் (நமனை வென்ற நாயகி., ப-57)

கீர்த்தனைகள் அனைத்தும் திருமாலின் புகழினைக் கூறுவதாகவும், திருமாலை வழிபடுவதன்றி உலகில் வேறு சிறப்புகள் ஏதுமில்லை எனவும் எடுத்துக்காட்டி, மக்களிடையே பக்தி உணர்வினைப் பரிப்புவனவாகி உள்ளன.

5. சித்திரக்கவி: சித்திரக்கவி எனும் அருங்கவியிலும் சௌராட்டிரர் கவி இயற்றியுள்ளனர். திண்டுக்கல் நாகல் நகரில் உறையும் வரதராஜப் பெருமான் மீது நேரிசை வெண்பாவில் அமைந்த இரதபந்தன வெண்பா. திருமால் துதியாகக் கலி விருத்தத்தில் அமைந்துள்ள கோமுத்திரி வடிவிலானகவி, குறள் வெண்பாவில் மாலை மாற்று வடிவிலான சித்திரக்கவி ஆகிய மூன்றும் சித்திரக் கவிகளுள் குறிப்பிடத்தக்கதாகும்.

5.1 இரதபந்தன வெண்பா:

வனமாலை மார்பன் மகாவமுகார்க் காமன்
தனரங்கன் வல்லவன் சீர்த்தாதை - மூனிவோர்கள்
ஏகனென்னு மா நந்தனி டேயில்லான் போகன்
நாகல் நகர் வரதன் (ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருவிருத்த மாலை., ப-1)

With Best Compliments From:

**Dark Rose Video Vision**

37-1/3, High Level Road,
Kirulapone,
Colombo 06
Tel: 075-517855

தேர்ச்சக்கரத்தில் ஆறு ஆறு எழுத்துக்களும், தேர் இடைத்தட்டில் ஒன்பது எழுத்துக்கள், அதன் கீழும், மேலும் ஒவ்வொரு எழுத்தாகக் குறைந்து கொண்டே அதன் கீழும், மேலும் ஒவ்வொரு எழுத்ததாகக் குறைந்து கொண்டே சென்று ஓர் எழுத்தில் முடியுமாறு இவ் ''இரபந்தம்'', அமைந்துள்ளது.

5.2 கோமூத்திரி: நான்கடிப் பாடலை, இரண்டு அடியாக எழுதி மேலும் கீழுமாக ஓரெழுத்து இடையிட்டுப் படிக்க அப்பாடலே ஆக அமைப்பது ''கோமூத்திரி'', ஆகும்.

கமல மேலுறை மாதணி நாதனே
நிமனே கருணாகர தேவனே
விமல மேயிறை வாதள நாயனே
அமலனே யரு ளீகவி தேகனே (மேலது., ப-10)

என்பது இக்கவியில் அமைந்துள்ள பாடலாகும்.

5.3 மாலைமாற்று: ஒரு மாலைக்கு அமைந்த இரண்டு தலைப்புக்களில் எதனை முதலாக் கொண்டு நோக்கினும் அம்மாலை ஒரே தன்மை உடையதாய்த் தோன்றுமாறு போல, ஒரு பாடலை முதலிலிருந்து நோக்கினாலும் முடிவிலிருந்து நோக்கினாலும் அதேபாடலாக அமையும்படி எழுத்துக்களை நிரலே அமைத்துப் பாடுவது, மாலை மாற்று என்னும் சித்திரக் கவிக்கு,

வாமாரா தாநாதா மாலேகா தாகாலே
மாதாநா தாராமா வா (மேலது., ப-10)

என்பதைக் காட்டாகத் தரலாம்.

6. திருப்பள்ளி எழுச்சி: ''கடவுளைத் துயிலெழுப்பும் பாசுரங்களான திருப்பள்ளி எழுச்சியினைப் பதினைந்தாம் நூற்றாண்டில் ''தூபதீர்த்தார்யர்'', எனும் சௌராட்டிர மகான் சௌராட்டிரமொழியில் பாடி இருந்தாலும், 19 ஆம் நூற்றாண்டில் ''கொண்டிய பாகவத்'', தமிழில் எழுதியுள்ள ஸ்ரீ ரங்கநாதர் திருப்பள்ளியெழுச்சியே முதன்மையானதாகக் கருத இடமுண்டு.

எழுந்திருமையா ஸ்ரீ ரங்கநாதரே..... முப்பத்து முக்கோடி தேவர்கள் துதி
செய்ய / முன்வந்து நிற்கிறார் பாரும் /செப்ப வோடிவர அற்புத சேவையை /
இப்பவே கிருபை செய்து தாரும் / எனவும்,
அரையர்களிருவரும் வேதியரனைவரும் / *அத்யாயனம்* செய்கிறார் பாடும் /

கரைந்து கரைந்து இரு கண்ணில் ஜலம் பொழிந்து வெள்ளம் பெருக வரம் தாரும். எனப் பலவாறு கூறி இறைவனைத் துயிலெழுப்பும் பக்தி ரசக் கீர்த்தனைகள், இப்பாடலில் தூய தமிழ் சொற்கள் அருகி, வடமொழிச் சொற்களின் கலப்பு காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ ரெங்க நாயகி திருப்பள்ளி எழுச்சி, ஸ்ரீ ரங்கராஜா திருப்பள்ளி எழுச்சி ஆகியவற்றையும் (மார்கழி சம்பிரதாய பஜனை., ப-19) இவர் பாடியுள்ளார். இவர் பிறந்த ஊர் திருக்கண்ண மங்கையை அடுத்துள்ள அம்மையப்பன் ஆதலால், பாடலின் இறுதியில் ''கிருஷ்ண மங்கராஜகோபாலருடன்'', எனும் சொல்வர முடிக்கிறார்.

7. விருத்தம் : திண்டுக்கல் நகரைச் சேர்ந்த கே.எம்.சுப்புராமன் என்பவன் வரதராஜப் பெருமாள் ''திருவிருத்தமாலை'', யினை இயற்றியுள்ளார். நேரிசை வெண்பாவில் அமைந்த விநாயகர் துதி, ஆசிரியர் விருத்தத்தில் அமைந்த குரு வணக்கம், கட்டளைக் கலித்துறையில் அமைந்த நூற்பயன் இவற்றுடன், இருபது அறுசீர் ஆசிரிய விருத்தம் பெற்றும், இறுதியில் வாழ்த்துச் செய்யுளுடனும், இத்திருவிருத்தமாலை அமைந்துள்ளது.

*With Best Compliments From:*

**Jesica Beauty Palar**

36/23, Edmontion Road,
Kirulapone, Colombo 06
Tel: 512720, 078-665861

பாற்கடல் நடுவே பாம்புப் பாய்மிசைப் பள்ளி கொள்ளுங்
கார்க்கடல் வண்ணா! கண்ணா! காக்கவென்றழைத்தழைத்து
வேர்த்துடல் குளிரவாடும் மெய்யன்பர் நாளுமுன்றன்
சீர்ப்பதம் பணிய நாகல்நகர் தனிற்றிகழுந் தேவே (திருவிருத்தமாலை., ப-7)

என ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் நாகல் நகர் தினிற்றிகழுந்தேவே நாகல் மாநகருள்ளானே எனும் சொற்கள் அமைந்துள்ளன.

8. வினாவிடை: தொ.ரா.பத்மநாபய்யர் கீதையிலுள்ள அரும்பெரும் தத்துவச் செய்திகளை எளிய மக்களும் அறிந்து கொள்ளும் வண்ணம் வினாவிடை வடிவில் வடிைரந்துள்ளார். கீதையின் பல விடயங்களிலும் சிதறிக் கிடக்கும் நுண்ணிய கருத்துக்களை ஒருங்கே திரட்டி நூலில் தக்க இடங்களில் கூறியுள்ளார்.

பார்த்தன் :- சுவாமி! கன்மம் எவ்வாறு செய்யப்பட வேண்டும்?
பகவான் :- அர்ஜீனா! கர்மமானது யக்ஞரூபமாகச் செய்யப்பட வேண்டும்.

அதாவது பிரயோஜனத்தைக் கோராமல் பகவத் அர்ப்பணமாகச் செய்வதாகும். (ஸ்ரீமத் பகவத் கீதை வினாவிடை சுருக்கம்., ப-4)

இந்நூலைப் படிப்பதன் மூலம் கீதையின் சிறப்பினைச் சிறியோர் முதல் அனைத்து தரப்பு மக்களும் அறிந்து கொள்ள இயலும்.

முடிவுரை : சௌராட்டிரர் தம் பக்தி இலக்கியம் பல்வேறு இலக்கிய வகைகளில் அமைக்கப்பட்டிருந்தாலும், வைணவ சமயத்தின் மேன்மையையும், திருமாலின் பெருமையினைப் பல விதங்களிலும் எடுத்துக் காட்டுவதே அடிப்படை நோக்கமாகிய திருமாலின் திருவிளையாடல்கள், அவதார நிகழ்வுகள், திருமாலை வழிபடுவதன் மூலம் வாழ்வில் கிட்டும் மேன்மைகள் ஆகிய செய்திகள் எடுத்துரைக்கப்படுகின்றன. பிற சமயக் காழ்ப்புணர்ச்சியோ, தாக்கமோ இம்மக்களின் பக்தி இலக்கியத்தில் காணப்படவில்லை என்பது சுட்டத்தக்கது.

கருவி நூல்கள்


1. கீதா நிலைய பால பஜனாவளி கீதாகீதம்., தொ.ரா.பத்மநாபய்யர்., மஹாலஷ்மி விலாசம் பிரஸ், மதுரை., 1949.
2. நமனை வென்ற நாயகி., கே.ஆர்.சேதுராமன்., சௌராட்டிரா கல்சுரல் அகாடமி., மதுரை., 1981.
3. பக்திரசக் கீர்த்தனங்கள், அம்மையப்பன் கொண்டிய பாகவதர்., சீதாராம் நிலையம்., அம்மையப்பன்., 1958.
4. மார்கழி சம்பிரதாய பஜனை., எஸ்.பலராமன் (பதி)., சீதாராம் நிலையம், அம்மையப்பன், 1992.
5. ஸ்ரீமத் பகவத் கீதை வினாவிடை சுருக்கம், தொ.ரா. பத்மநாபய்யர், கீதா நிலையம், மதுரை, 1949.
6. ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருவிருத்தமாலை, கே.எம்.சுப்புராமன், அபிராமி விலாசம் பிரஸ், திண்டுக்கல் (ஆ.இ)
7. ஸ்ரீ விட்டலநாம ஸங்கீர்த்தனை (மூன்றாம் பாகம்), ஸ்ரீமத் விட்டலதாஸ சுவாமிகள், ஸ்ரீ விட்டலகான ஞானோதய ஸமாஜம், மதுரை, (ஆ.இ)



*With Best Compliments From:*
**C. Ajithkumar** (B.B.A) St. Peters College, Colombo 04
Kotahena (ACA) Wellawatta (BBA) Mattakuliya (KCI SSC)
Group Classes
50. A, 6th Lane, St. Benedict's Mawatha, Kotahena
Colombo 13
Tel: 077-630978, 074-613269

# உய்ந்திட வழிசொல்வாய்

இராகம் :- நாட்டை தாளம் :

உதிக்கின்ற செங்கதிர் நிறத்துடன் பிறந்தாய்
பூரணச்சந்திரன் போலே வெண்ணிறமானாய்
விரத்தின் மேன்மை உன்னிடம் மிகுந்திருக்கும்
பசுமை நிறத்தாளைத் தழுவியே இருப்பாய்

நான்கு முகமுடைய துவிஜ கணபதியானாய்
அட்ச மாலையுடன் உச்சிஷ்ட கணபதியானாய்
அங்குசம் ஏந்தியே சஷிப்த கணபதியானால்
கற்பக விருட்ச அடியில் நிருத்த கணபதியானாய்

ஏழுலகும் உன்னை வணங்கிடச் செய்தாய்
ஏரகப் பெருவாழ்வே என்னை ஆட்கொண்டாய்
கண்ணீர் பொழிகிறேன் கருணை வேண்டுகிறேன்
காதல் கொண்டிட்டேன் அருளும் தந்திடுவாய்.

களிநடம் புரிந்தேநீ காசினியைக் காத்திட்டாய்
வரசித்தி விநாயகனே கருணை கொண்டவனே
உந்தன் புகழையே பாடியே நானும்
உய்ந்திட வழிசொல்வாய் உத்தம விநாயகனே.

# இந்திய ஓவியக் கலைகள்..

பேராசிரியர் :- சி.பத்மநாதன்
B.A.P.HD(Lond) FIBA

இலக்கியம், நாட்டியம், ஓவியம், இசை, சிற்பம் ஆகியவற்றுக்கிடையே சில நெருங்கிய தொடர்புகள் இந்திய மரபிலே - குறிப்பாக இந்து சமுதாயத்திலுள்ள சிந்தனை மரபிலே - காணப்படுகின்றன. பரதர் முதலாயினோர் உருவாக்கிய கலாதத்துவம் இக்கலைகள் அனைத்துக்கும் பொதுவானது. முருகியற் கோட்பாடுகளும் ரஸபாவங்கள் பற்றிய கோட்பாடுகளும் அவ்வண்ணமானவை. புலக்காட்சிக்குரியனவற்றையும் கதைகளையும் இலக்கிய நெறிகளுக்கமையவும் உணர்ச்சி பூர்வமாகவும் மிகுந்த கவர்ச்சியான மொழி நடையிலும் சுவைநயத்துடன் விளங்குவது இலக்கியம். அதிலே கருத்துகளும் உணர்வுகளும் மொழிமூலம் புலனாகின்றன. இலக்கியத்தைப் புரிந்து கொள்வதற்கும் நயந்து கொள்வதற்கும் சிந்தனா சக்தியும் கற்பனா சக்தியும் இன்றியமையாதவை.

புலவர்கள் சொற்களால் வர்ணிப்பவற்றை அங்காபிநயங்களால் கீதம், வாத்தியம் என்பன சகிதமாகப் புலப்படுத்துவது நாட்டியம். நாட்டியமும் இலக்கியத்தைப் போல நயத்து சுவைத்தற்குரியது. அது பார்த்து ரசிப்பதற்குரிய கலையாகும். நாட்டியம் அரங்கினில் நிகழ்வது. நிகழ்ச்சி நிறைவேறிய பின்னர் அதனைப் பார்க்க முடியாது. அது நினைவில் மட்டும் நிலைபெறத்தக்கது. ஒரே கரணத்தையோ பிறவிருத்தியையே மீண்டும் அரங்கேற்றிக்கொள்ளலாம். ஆயினும் ஒருவரால் வெவ்வேறு சமயங்களில் ஆடப்படுங் கரணங்கள் ஒரே மாதிரியானவையாக அமைவதில்லை, சிற்பிகள் செதுக்கும் சிலைகளும் உலோகத்தில் வார்க்கும் படிமங்களும் அவ்விதமானவை.

இசை வாத்தியம், கீதம் என இருவகைப்படும். உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளையும் அனுபவங்களையும் கதைகளையும் கருத்துக்களையும் இனிய சந்தங்களில் அமைத்துத் தாள லயங்களுக்கு அமைவாகப் பாடுவது கீதம். குரலினிமையும் மொழிவளமும் சங்கீதத்திற்கு இன்றியமையாதவை. குழல், யாழ், வீணை முதலிய வாத்திய ஒலிகள் சங்கீதத்திற்கு மெருகூட்டுகின்றன. வாத்தியங்கள் துளைக்கருவிகள், நரம்புக்கருவிகள், தோற்கருவிகள் என மூவகைப்படும். குழல், புல்லாங்குழல் போன்றவை துளைக்கருவிகளாகும். யாழ், வீணை முதலானவை நரம்புக்கருவிகள் மேளம், மத்தளம், மிருதங்கம் ஆகியன தோற்கருவிகளாகும்.

ஓவியங்கள் வண்ண மைகளால் வரையப்படுபவை. இயற்கைக் காட்சிகள் ஓவியங்கள் சிலவற்றிலே சித்திரக் கோலமாக விளங்குகின்றன. வேறு சில ஓவியங்கள் இலக்கியங்களிற் காணப்படும் கதைகளின் விளக்கமானவை. இன்னுஞ் சில ஓவியங்கள் அரண்மனைக் காட்சிகள், நகர வாழ்க்கை, கிராமிய வாழ்க்கை போன்றவற்றைச் சித்திரிக்கும் பாங்கில் அமைந்துள்ளன.

பண்டைக்காலம் முதலாக ஓவியக்கலை இந்தியாவிலே சிறப்புப் பெற்றிருந்தது. சித்திரங்களைப் பற்றியும் சித்திரக்காரரைப் பற்றியும் கவிஞர் பலர் குறிப்பிடுகின்றனர். உபமான உபமேயங்களை விளக்குவதற்கு ஓவியங்களை அவர்கள் உதாரணமாகக் கொண்டுள்ளனர். ஓவியங்களை வரைவதற்குப் பயன்படுத்தப்படும் வட்டிகை, தூரிகை, மை வகைகள், வண்ணக்கலவைகள் போன்றன பற்றிய குறிப்புகளும் நூல்களிற் காணப்படுகின்றன. ஓவியக்கலை பற்றிய தனியான இலக்கியப் பிரிவொன்றும் உருவாகியுள்ளது. அதில் அடங்கும் நூல்களிலே சித்திரக்கலை பற்றிய பிரதான அம்சங்கள் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன.

*With Best Compliments From:*

**F. C. Jesuraj** (B. Sc)

St. Thomas College, Mattakuliya (K.C.I)
Galle Road M.A, Wellawatta P.U.C
Jampetah StreetKotahena (A C A)
Tel 335287, 594475

ஓவியங்களை பற்றி இலக்கியங்களிற் காணப்படும் செய்திகள் தொல்பொருட் சின்னங்கள் மூலம் உறுதியாகின்றன. சித்திரங்களைத் துணிகளிலும் மரப்பலகைகளிலும் வரைந்தனர். அவற்றை மலைகளிலே குடையப்பெற்ற குடபோகங்களிலும், கற்றளிகளிலுஞ் சுவர்களில் வரைந்தனர். அத்தகைய சித்திரங்களைச் சுவரோவியங்கள் என்பர். புராதனமான சுவரோவியங்கள் பெரும்பான்மையும் தஹிணாபதத்திலும் தென்னிந்தியாவிலுங் காணப்படுகின்றன. அவற்றுள்ளும் மிகவுஞ் சிறப்பானவை சமண, பௌத்த சமயச் சார்புடையவை. பௌத்த ஜாதகக் கதைகள் அஜந்தாவிலுள்ள ஓவியங்களுக்கு ஆதாரமானவை. அஜந்தாவிலே பெருமளவிலான குகைகள் பலவற்றிலே சித்திரக் காட்சிகள் வரையப்பட்டுள்ளன. புத்தர் பெருமானின் வாழ்க்கை வரலாறு பற்றிய விவரங்களும் ஜதீகங்களும் அவற்றுட் சிலவற்றிலே வரையப்பட்டுள்ளன. வேறு சிலவற்றிலே மக்கள் வாழ்க்கையினைப் பிரதிபலிக்கும் கோலமான காட்சிகள் வரையப்பட்டுள்ளன. அஜந்தா ஓவியங்கள் பல நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை.. கலைஞர் பலரால் உருவாக்கப்பெற்றவை. ஒரு கலைப்பாணியின் நீண்டகால வரலாற்றுப் பிரதிபலிப்பலை . அத்துடன் அவை சமய மரபுகளினதும், சமூகவாழ்க்கையினதும், பண்பாட்டுக் கோலங்களினதும் சித்திரங்களானவை. அதனால் அவை ஓவியக்கலை வரலாற்றிலே மிகுந்த சிறப்பினைப் பெற்றுள்ளன. அஜந்தா ஓவியங்கலைஞரின் பயிற்சித் தளமாக நெடுங்காலம் நிலைபெற்றுள்ளமை குறிப்பிடற்குரியது.

சமணப்பள்ளிகளுக்கும் ஓவியக்கலைக்கும் இடையிலே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. கர்நாடகத்திலும் தமிழகத்திலும் அமைந்துள்ள சமணக்கோயில்கள் பலவற்றிலே சிறந்த ஓவியங்கள் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் பௌத்த சமயச் சார்புடைய ஓவியங்களுக்குப் பிற்பட்டவை. அவை குறிப்பாக கி.பி. 850-1750 ஆகிய காலப்பகுதிக்குரியன வ. சமணக் கோயில்கள் சிலவற்றிலே சித்திரங்களை விளக்கும் வண்ணமாகச் சுருக்கமான குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன. சமணரின் ஓவியங்களிலே தீர்த்தங்கரரான ரிஸபதேவர், நேமிநாதர், வர்த்தமான மகாவீரர் போன்றோரைப் பற்றிய ஜதீகங்களும் பௌராணிகப் பாங்கில் அமைந்துள்ள கதைகளும் சித்தரிக்கப்பட்டுள்ளன. திருப்பருத்திக் குன்றத்திலுள்ள விஜயநகர, நாயக்கர்கால ஓவியங்கள் அத்தகையனவாகும். சித்தன்னவாசல் ஓவியங்கள் வேறொரு வகையானவை. அங்குள்ள விதானத்திலே வரையப் பெற்றுள்ள தாமரைத் தடாகத்தின் காட்சி அற்புதக் கோலமான ஒரு இயற்கைக் காட்சியாகும். அங்குள்ள மண்டபத் தூண்களில் நாட்டியக் காரணங்கள் நிலவும் அரசன், அரசி ஆகியோரின் உருவங்களும் சித்திரங்களாக வரையப்பெற்றுள்ளன.

வைதீகசமய மரபிலுள்ள தெய்வீகக் கோலங்கள் எட்டாம் நூற்றாண்டு முதலாகவே சித்திரக்கோலமாகக் கோயில்களிலே விளங்குகின்றன. சிவன், மகாவிஸ்ணு ஆகியோரின் உருவங்கள் வண்ணம் பூசிய கோலத்தில் வாதாபியிலும் எல்லோராவிலுங் காணப்படுகின்றன. காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலின் சுற்றர்லை விமானங்களில் ஓவியங்கள் வரையப்பெற்றிருந்தன. அத்துடன் அங்குள்ள கடவுட்படிமங்கள் பல வண்ண மைகளினால் மெழுகப்பட்டிருந்தன. காலப்போக்கிலே அவை பெரும்பாலும் ஒளி மங்கி மறந்துவிட்டன. மைப்பூச்சின் அடையாளங்கள் மட்டுமே இப்போது காணப்படுகின்றன. தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் விமானத்தின் அடித்தளத்திலே சித்திரச்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதிலே புராணக் கதைகளை அடிப்பையாகக் கொண்ட சித்திரங்கள் காணப்படுகின்றன. விஜயநகர, நாயக்கர் காலங்களிலே வரையப் பெற்ற ஓவியங்கள் தென்னிந்தியக் கோயில்கள் முதலான தலங்களில் அமைந்திருக்கும் ஓவியங்கள் அவற்றுட் பிரசித்தமானவை. திரிபுராந்தகர், பிாடனர் என்போர் பற்றிய புராணக் கதைகளும் உமாமகேஸ்வர் திருக்கல்யாணமும் பெரும்பாலான கோயில்களிற் சித்திரக்கோலமாக விளங்குகின்றன. திருவாரூரிலே, திருவாசிரியன் மண்டபத்திலே

With Best Compliments From:

**P. Vallipuram**

Mayurapathy Amman, Devasthanam.

திருவாரூர்ப் புராணக்கதை முழுவதும் ஓவியமாக வரையப்பட்டுள்ளது. ஒவ்வொரு கட்சியினையும் விளக்கும் வண்ணமாக வாக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன. ஆந்திரப் பிரதேசத்திலுள்ள லெபாஸி என்னுமிடத்து வீரபத்திரர் கோயிலிற் சிறுத் தொண்டர் புராணக் கதையிலுள்ள விவரங்கள் சில சித்திரக்கோலமாக விளங்குகின்றன.

புராதன காலத்து ஓவியர்கள் மனித உருவங்களைச் சித்திரங்களாக வரைந்தனர். அவர்களிற் சிலர் இராசகுடும்பத்தவரினதும் செல்வர்களினதும் ஆதரவினைப் பெற்றிருந்தனர். சித்திரங்கள் எழுதிய படங்கள் அடங்கிய புத்தகங்களைப் பற்றிப் புராதனமான நூல்கள் கூறுகின்றன. சமகாலத்து இராசகுமாரர்களினதும் இராசகுமாரிகளினதும் வடிவங்ளைச் சித்திரங்களாக வரைவது வழக்கம். பாரசீகக் கலைப்பாணியின் செல்வாக்கு ஏற்பட்டதன் விழைவாக அந்த மரபு மொகாலயர் காலத்தில் மறுமலர்ச்சி பெற்றது. இஸ்லாமிய சமய மரபிலே கடவுளின் வடிவத்தைப் படிமக்கோலத்தில் அமைக்கும் வழக்கமில்லை. கலாரசிகர்களான மொகாலயச் சக்கரவர்த்திகள் இந்தியாவின் பலபாகங்களிலுமுள்ள பிரபலமான ஓவியர்களை அரண்மனைக்கு வரவழைத்து உலகியற் பங்கான ஓவியங்களை வரைவித்தனர். அக்பரின் காலத்து அரண்மனை ஓவியர்களிற் பெரும்பாலானோர் இந்துக்களாவர். மொகாலயர்களின் ஆதரவில் வரையப் பெற்ற ஓவியங்கள் லௌகீகமானவை. சமகாலத்து ஐரோப்பிய ஓவியங்களைப் போன்றவை, ஆயினும், சில அம்சங்களிலே அவை கூடிய சிறப்புக் கொண்டவை உயிரோட்டமானவை. மொகாலயரின் ஓவியங்கள் அரண்மனை வாழ்க்கையினைச் சித்ரிக்கும் பாங்கில் அமைந்தவை. சக்கரவர்த்திகள், இளவரசர், அவர்களின் காமக்கிழத்திகள் முதலியோரின் உருவங்களும் அரண்மனையில் அவர்கள் தங்கியிருக்கும் மாடங்களும் அவற்றிலுள்ள அலங்காரப் பொருட்களும் சித்திரங்களாக வரையப் பட்டுள்ளன. மொகாலயர் ஓவியங்களில் அங்கலட்சணங்கள் இயல்பானவை கவர்ச்சி பொருந்தியவை. அணியலங்காரங்கள் அவற்றிலே மிகுந்து காணப்படுவதில்லை. அவற்றிலுள்ள துகில்கள் மிகவும் மென்மையானவை. மைவண்ணங்கள் தேவைக்கேற்ற அளவில் மட்டும் தீட்டப் பெற்றுள்ளன.

மொகாலயச் சக்கரவர்த்திகளைப் பின்பற்றிய சாமந்தர்களும் மாநில ஆளுநர்களும் இராசபுத்திர மன்னர்களும் அதேபோன்ற ஓவியங்களை வரைவித்தனர். அதன் விளைவாக மொகாலயரின் ஓவியக்கலைப்பாணி இந்தியாவின் பல பாகங்களிலும் பெருஞ்செல்வாக்குப் பெற்றது. ஔரங்சீபுவின் மிக இறுக்கமான சமயக்கோட்பாடுகளின் விளைவாக அரண்மனை ஓவியர்கள் ஆதரவிழந்தனர். அவர்களிற் பலர் இராசபுத்திர மன்னர்களின் அரண்மனைகளை நாடிச் சென்றனர். இராசபுத்திரரிடையே காணப்பட்ட கலைப்பாணி அதனால் மேலும் விருத்தியடைந்தது. இராசபுத்திரரின் ஆதரவினைப் பெற்ற ஓவியக் கலைஞர் இந்திய ஓவியக்கலை வரலாற்றிலே புதியவொரு அத்தியாயம் படைத்தனர். கிருஸ்ணரின் வாழ்க்கை வரலாறு பற்றிய பாமரர் வழக்கிலுள்ள கதைகளும் பகவத்புராணக் கதைகளும் சித்திரங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

துகில், ஏடு ஆகியவற்றில் எழுதப்படும் நூல்களின் சுவடிகளிலே அவற்றின் முகப்பிலும் ஓரங்களிலும் சித்திரங்களை வரைவது நெடுங்கால வழங்கமாகும். புராதனமான சமணநூல்களின் சுவடிகளில் இவ்விதமான சித்திரங்கள் காணப்படுகின்றன. வசந்த விலாசச் சித்திரங்கள் அந்த வகையிலுள்ள சித்திரங்களுக்குச் சிறந்த உதாரணங்களாகும். காலப்போக்கிலே சைவர், வைணவர், சாக்தர், பௌத்தர் முதலியோரும் அந்த வழக்கத்தைப் பின்பற்றினார்கள். மேற்கிந்தியாவிலும் வடகிழக்கிந்தியாவிலும் நேபாளத்திலும் சித்திரங்கள் வரையப்பெற்ற ஏட்டுச் சுவடிகள் ஆயிரக்கணக்கில் உள்ளன. அவற்றிலே தெய்வங்களின் உருவங்களும், இராமாயண, மகாபாரதக் கதைகளின் அம்சங்களும் வைணவ சம்பிரதாயந் தொடர்பான விவரங்களுஞ் சித்திரங்களாக வரையப்பட்டுள்ளன. அவற்றைவகைப்படுத்தி, விவரித்து வெளியிடுவதற்கான முயற்சிகள் இன்னும் முறையாக மேற்கொள்ளப்படவில்லை.

02. சித்திரகாரர்.

ஓவியர்களைச் சமஸ்கிருத, பாளி மொழிகளிற் சித்திரகார எனக் குறிப்பிடுவது

With Best Compliments From:

Sri Durka Gold House

118 B, Galle Road,
Colombo 06
Tel: 586644

வழக்கம். சித்திரகாரனைப் பற்றிய மிகப் புராதனமான சாசனக் குறிப்பு கி.மு. இரண்டாம் நூற்றாண்டிற்கு உரியதாகும். அது ராம்காரிலுள்ள ஜோகிமார என்னும் குகையிற் காணப்படுகின்றது. ரூபதக்க என்பது ஓவியனின் பெயராகும். நாட்டியப் பெண் ஒருத்தி அவனுடைய காதலி என்றுஞ் சொல்லப்படுகின்றது.

நகரவாசிகளான ஆடவர் ஓவியக்கலை பயின்றிருக்க வேண்டுமென்று காமசூத்திரம் கூறும். கலாரசிகனொருவனின் மனையிலே சுவரிலுள்ள குமிழியொன்றினிலே வீணை தொங்குமென்றும் அவனுடைய மாடத்திலே ஓவியம் வரையும் சித்திரப்பலகையும் வட்டிகைப் பெட்டியும் வழமையாகக் காணப்படும் என்றும் அந்நூல் கூறுகின்றது. சித்திரக் கலையிற் தேர்ச்சி மிக்கவர்களையே சித்திரகார என்றனர். வண்ணம் பூசுவதில் அவர்களுக்கு உதவிபுரிந்தோரைத் திண்டி என்று சொல்வது வழக்கம்.

அர்ஜுன என்ற சித்திரகாரனைப் பற்றி உத்தரராமசரிதம் குறிப்பிடுகின்றது. இராமரின் வாழ்க்கை வரலாறு பற்றிய அரண்மனையிலுள்ள சித்திரங்கள் அர்ஜுனரின் கைப்பணியானவை என்று சொல்லப்படுகின்றது. ஹர்ஷவத்தனின் சகோதரியான ராஜ்யஸ்ரீயின் கல்யாணம் நடைபெற்ற வேளையிலே ஸ்தான்வீஸ்வரத்து (தனேஸ்வர்) அரண்மனையிலே சித்திரங்கள் புதிதாக வரையப்பட்டிருந்தன. அவற்றை வரைந்த சித்திரகாரரைப் பாராட்டிக் கௌரவித்தனர். சித்திரகாரன் ஒருவனுக்கு பத்துக் கிராமங்களை மன்னனொருவன் மானியமாகக் கொடுத்தானென்று கதாசரித்சாகரம் என்னும் நூலிற் சொல்லப்படுகின்றது. சித்திரகாரர் பலர் அரண்மனைகளில் ஆதரவினையும் பாராட்டுகளையும் பெறுவது வழக்கம் என்பதை அந்நூல் மூலமாக அறிய முடிகின்றது. மேலும், சித்திரகாரன் ஒருவன் அரசகுமாரியின் உருவத்தை இயல்பான கோலத்திலும் உயிரோட்டமுள்ளதாகவும் வரைந்தமை பற்றியும் அந்நூலிற் கூறப்பட்டுள்ளது.

சித்திரகாரர் தமக்கு வேண்டிய வண்ணக் கலவைகளையும் வட்டிகைகளையும் சித்திரப்படங்களையும் சித்திரப்பலகைகளையும் தாம் போகும் இடங்களுக்கு கொண்டு செல்வது வழக்கம். சித்திரகாரன் ஒருவன் ஓவியம் வரையும் காட்சியொன்றை மிருச்சகடிக என்னும் நூல் வர்ணிக்கின்றது. அவனைச் சுற்றிப் பல மைக்கூடுகள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. வால்மீகி, ஹர்ஸவர்த்தனன், செமேந்திரர் போன்ற பிரபலமான ஆசிரியர்கள் சித்திரகாரரின் குணாதிசயங்களைக் குறிப்பிடுகின்றனர். சித்திரகாரரின் படைப்புகளை அரங்குகளிலே விமர்சிக்கும் வழக்கமும் புராதன காலத்திலே காணப்பட்டது. திலகமஞ்சரி என்னும் நூல் அத்தகைய சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுகின்றது.

சித்திரம் வரைவதற்கு முன்பு சித்திரகாரர் என்ற வகையிலே களத்தை வரையறை செய்ய வேண்டும். அதன் பின் உருவத்தின் கோடுகள் வரையப்படும். அதனை ரேகாப்பிரதானம் என்றும் சித்திரசூத்திரதானம் என்றுஞ் சொல்வர். கோடுகள் செம்மையாக வரையப்பட்டதும் வண்ணக்கலவைகள் பூசப்படும். ஆரம்ப நிலையில் அது ஹஸ்தலேகம் எனப்படும். ஓவியம் செம்மையாக்கப்பெற்ற கோலத்தில் அது வர்ணகம் எனப்படும். இறுதியாகச் செய்யப்படும் பணி சித்திர உன்மீலனம் என்பதாகும். சித்திரத்துக்கு உயிரூட்டுவது இவ்வாறு சொல்லப்படும். தரமான ஓவியங்கள் உயிரோட்டமுள்ளனவாக அமைதல் வேண்டும்.

### 4. கருவிகளும் கலவைகளும்

ஓவியங்களை வரைவதற்கு வேண்டிய பொருள்களைப் பற்றிய விவரங்கள் இலக்கியங்களிற் பொதுவாகவும் சிற்ப சாத்திரங்களிற் குறிப்பாகவுஞ் சொல்லப்படுகின்றன. சித்திரக்காரனுக்குரிய வட்டிகைகள் அடங்கிய சமுத்தகம் என்னும் பெட்டி, சித்திரப்பலகை, சித்திரக்கோல் என்பன பற்றிக் காமசூத்திரத்தில் வாத்ஸ்யாயனர் குறிப்பிடுகின்றார். தூரிகைகளை வைத்து வண்ணக் கலவைகளைத் தோய்ப்பதற்கான மைக்கூடுகள் பற்றி மிருச்ச கடிகத்திலே கூறப்படுகின்றது.

*With Best Compliments From:*

**Royal Opticians**

257/1 E, Galle Road,
Colombo 06
Tel: 553541

சித்திரக்காரனின் வீட்டிலுள்ள பலகணிச் சுவரிலுள்ள பல வண்ண மைக்கூடுகளைப் பற்றிய குறிப்பொன்று பாததாடிதகம் என்னும் நூலிற் காணப்படுகின்றது. சித்திரப் பலகைகளோடு இணைக்கப்பட்டுத் தொங்கும் வட்டிகைக் கூடுகளைப் பாணபட்டர் குறிப்பிடுகின்றார். வர்ணிக-தரண்ட-சமுத்ககம் பற்றி மாகாகவி காளிதாசர் சொல்வார்.

அபிலாஷிதார்த்த சிந்தாமணி போன்ற சிற்பசாத்திர நூல்கள் தூரிகை, வட்டிகை என்பன பற்றிக் குறிப்பிடுகின்றன. அவற்றிலே வட்டிகை என்பதை திண்டுவர்த்தி என்றும் கிட்ட வர்த்தி என்றுஞ் சொல்வர். கூர்ச்சகம், லேகினி, தூலிகை என்னுந் தூரிகைகள் பற்றியும் இவற்றிலே சொல்லப்படுகின்றது.

தூலிகை என்னும் வரைகோல் மூங்கிற் தண்டிலே செய்யப்படும். அதிற் செப்பூசி ஒன்று பொருத்தப்பட்டிருக்கும். ஒரு முனையிலே சிறிய இறகு செருகப்பட்டிருக்கும். மையினால் வரையும் பொழுது தவறுகள் ஏற்படின் அழித்துத் திருத்தஞ் செய்வதற்கு அது பயன்படும். லேகினி என்பது வண்ணக் கலவைகள் பூசுவதற்குரிய தூரிகையாகும். இளங் கன்றுகளின் காதிலுள்ள மயிர் அதன் நுனியிற் கட்டப்பட்டிருக்கும். அணில்களின் வாலிலுள்ள மயிர், செம்மறியாடுகளின் வயிற்றுமயிர் ஆகியனவும் இவ்வாறு பயன்படுத்தப்படுவதுமுண்டு. வண்ணம் பூசுவதற்குப் பயன்படுத்தப்படும் வெவ்வேறு வகையான தூரிகைகளைப் பற்றிய விவரங்கள் அபிலாஷிதார்த்த சிந்தாமணி (மானசொல்லாச) போன்ற நூல்களிலே காணப்படுகின்றது. ஆஷாலனம் என்ற வண்ணமெழுகிற்கு கூர்ச்சக என்ற பெருந்தூரிகை பயன்படுத்தப்படும். சாலகை என்னுந் நுண்ணிய தூரிகை உன்மீலத்திற்கு (உயிரோட்டஞ் செய்வதற்கு)ப் பயன்படுத்தப்படும்.

சித்திரம் வரையும் படங்களை சுருள்களாக மடித்து பட்டுப்பைகளில் வைப்பது வழக்கம். சித்திரப் படங்கள் பொருந்திய பலகைகளைப் பற்றியும் நூல்களிற் குறிப்புகள் உள்ளன. சிவப்பு, நீலம், வெள்ளை, கருப்பு, மஞ்சள் முதலிய நிறங்களில் வண்ணக்கலவைகள் தயாரிக்கப்பட்டன. அதற்குத் தாவர வஸ்துகளும் கனிப்பொருள்களும் பயன்படுத்தப்பட்டன.

5. சித்திரசாலைகள்

சித்திரசாலை எனப்படும் ஓவியக்காட்சி நிலையங்கள் இராமாயணம், மகாபாரதம் போன்ற நூல்களிற் குறிப்பிடப்படுகின்றன. சித்திரசாலை, சித்திரமாளிகை, சித்திரகூடம், எழுதுநிலைமண்டபம் எனப் பலவாறு அவற்றைத் தமிழ் நூல்கள் குறிப்பிடும். அவற்றிலே வண்ண ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும். சில சமயங்களில் அவற்றின் சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருக்கும்.

சித்திரசாலைகளும் பலவகைப்படும். அரண்மனைகளில் உள்ளவை ஒரு வகையானவை. அந்தப்புரங்களிலுஞ் சித்திரசாலைகள் அமைக்கப்பட்டிருக்கும் இராசகுமாரிகளின் பள்ளியறைகளிலும் (சயன் சித்திரசாலை), குளிப்பறைகளிலும் (அபிஷேகச்சித்திரசாலை) சித்திரங்களைக் காட்சிக்கு வைத்திருப்பது வழமையாகும். பரத்தையர் இல்லங்களிற் காணப்பட்ட சித்திரசாலைகளைப் பற்றிய இலக்கியக் குறிப்புகள் பல உள்ளன. சிருங்காரம், ஹாஸ்யம், சாந்தம் ஆகிய ரஸக் கோலங்களை விளக்கும் ஓவியங்களே அரண்மனைகளிலும் வீடுகளிலும் இடம்பெற்றன. ஆயினும், கோயில்களிலும், நிருத்தமண்டபங்களிலும் வேறு பொதுவிடங்களிலும் எல்லாவிதமான ஓவியங்களையும் வரைந்து கொள்ளலாம். மங்களமான காட்சிகளின் சித்திரங்களே பெரும்பாலும் அவற்றிலே காணப்படும்.

காளிதாஸர் மாலவிகாக்னிமித்திரம் என்னும் நாடக நூலிற் சித்திரசாலை ஒன்றினை வர்ணிக்கின்றார். அதன் சுவர்களில் அந்தப்புரக் காட்சிகள் புதிதாக வரையப்பட்டிருந்தன. ஓவியக் காட்சிகளின் முகங்காட்டுபவர்களின் கோலங்கள் இயல்பானவையாகவும் உயிரோட்டமுள்ளனவாகவுந் தெரிந்தன. அங்குள்ள சுவர்களில் அமைந்திருந்த ஓவியங்களைப் பார்த்ததும் அரசி பரவசமுற்று அதிசயமடைந்தாள் என்ற

*With Best Compliments From:*

Kumarasamy Kalaichchelvan (B. Com)

D. S. Senanayaka College.

சொல்லப்படுகின்றது. நிரையாக அமைந்துள்ள சித்திரசாலைகளைப் பாணபட்டர் விமானபந்தி என்று குறிப்பிடுகின்றார். நிரையான சித்திரங்கள் அடங்கிய நீளமான சித்திரசாலையை வீதி என்று பவபூதி சொல்கின்றார். சித்திரசாலை விமானம் போன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் அதன் முன்னாற் சிறு கோபுரம் போன்ற அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் எனவும் நாரத சிற்பசாஸ்திரம் கூறும். மேலும் அதில் அலங்காரமான வாசற் கதவுகள், சாளரங்கள், பலகணிகள், மகத்தான தூண்கள் போன்றனவும் அமைந்திருக்க வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. அரண்மனைக்கு முன்பாகவோ நான்கு வீடுகள் கூடும் சந்தியிலோ சித்திரச்சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணமும் நிலைபெற்றது. அது விமானம் போலக் காட்சியளிக்க வேண்டும். அதன் மேற்பகுதியிற் சிகரம், கலசம் என்பன பொருந்தியிருக்க வேண்டும். இத்தகை சித்திரச் சாலைகள் எல்லாம் அழிந்துவிட்டன.

சித்திரச் சாலைகளில் காணப்பட்ட ஓவியங்களைப் பற்றியும் சில நூல்களிற் குறிப்புக்கள் காணப்படுகின்றன. தேவர், கருத்தவர், கின்னரர், இராசகுமாரர், பெருவீரர், நர்த்தகிகள், அரம்பையர் முதலியோரின் உருவங்களை ஓவியக்காட்சிகளாக வரைவது வழக்கம். உருவங்களை வரையுமிடத்து பொருத்தமான ரசபாவங்கள் விளங்கும் வண்ணமாக அவற்றை வரைதல் வேண்டும். நூல்களில் விதிக்கப்பட்டவாறும் தேசவழமைப்படியும் அணியலங்காரங்களும் வஸ்திரங்களுஞ் சித்தரிக்கப்படும். பழமையும் இலட்சியமும் திறமையும் ஒன்றுகூடும் சாதனமாக ஓவியக்கலை அமைந்தது. சித்திரக் கோலமாக விளங்கும் காட்சிகள் புராதனமான கதைகளின் உருவகமானவை. அவற்றிலே முகங்காட்டும் பாத்திரங்கள் சமகாலத்தவர்களின் அங்கலட்சணங்களையும் பழங்க வழக்கங்களையும் பிரதிபலிப்பவை. அவற்றில் விளங்கும் கலைப்பாங்கும் உயிரோட்டமான கோலமும் சித்திரக்காரரின் கைவண்ணமானவை. ஓவியங்களாக வரையப்பெற்ற இராமாயணக் காட்சிகளில் அத்தகைய பண்புகள் காணப்பெற்றன. சித்திரசாலைகளிலுள்ள இராமாயணக் காட்சிகளைக் காளிதாசனும் பவபூதியும் வர்ணிக்கின்றனர். தமயந்தி பற்றிய ஓவியக் காட்சிகளை ஸ்ரீ ஹர்ஷர் வர்ணிக்கின்றார். சமகால வாழ்க்கைச் சித்திரங்களான ஓவியங்கள் பற்றிய வர்ணனைகள் மாலவிக்காக்னிமித்திரம், வித்தசாலபஞ்சிகை போன்ற நூல்களிற் காணப்படுகின்றன.

நிலையானவை, நகர்த்திச் செல்லக்கூடியவை என இரு வகையான சித்திரச்சாலைகளைப் பற்றிப் புராதனமான இந்திய இலக்கியங்களிற் சொல்லப்படுகின்றது. விமானம் போலக் கலைக்கூடங்களாக அமைக்கப்படுபவை நிலையானவை அவை வனப்பு மிக்க கட்டடங்களாக அமைந்தவை. நகர்த்திச் செல்லக்கூடியவை வண்டிகளில் ஏற்றிச் செல்லப்படுபவை அளவிற் சிறியவை. அவை கலைப் பொருட்களின் காட்சிக் கூடங்களாக விளங்கின. அவை குறிப்பாக வசந்த காலத்தில் இரசிகர்களைப் பெரிதும் கவர்ந்தன.

06. ஓவியம் பற்றிய நூல்கள்

சிற்பசாஸ்திரம், கலை என்பனபற்றிய நூல்கள் பலவற்றிலே ஓவியக்கலைபற்றிய தனிப்பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஓவியங்களை வரையும் விதங்கள், வண்ணக் கலவைகள், தூரிகைகள் வரைவதற்கு வேண்டிய சுவற் பகுதிகளையும் மரப் பலகைகளையும் சித்திரப்படங்களையும் அமைத்துக் கொள்ளும் விதங்கள் முதலியவற்றைப் பற்றிய விவரங்கள் அவற்றிலே காணப்படுகின்றன. விஷ்ணுதர்மோத்திர புராணத்தின் ஒருபகுதியாக சித்திரசூத்திரம் ஓவியங்களைப் பற்றி வர்ணிக்கும் இந்திய நூல்களிலே மிகவும் புராதனமானது. அது ஏழாம் நூற்றாண்டுக்குரியது என்று பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. இந்தியாவில் ஓவியக்கலையானது மிகவும் வளர்ச்சியடைந்திருந்த காலத்தில் அது எழுதப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. அதிலே சொல்லப்பட்ட விவரங்களின்
விளக்கமான பகுதிகள் பிற்காலத்து நூல்கள் பலவற்றில் உள்ளன. மானசொல்லாச என்னும் அபிலாஷிதார்த்தசிந்தாமணி, சிவதத்துவரத்னாகர(ம்), சில்பரத்ன(ம்),

With Best Compliments From:
**Chhaya** (Studio)
40-1/1, Galle Road,
Colombo 06
Tel: 074-513888, 594492

நாரதசில்ப(ம்), பிரஜாபதி சில்ப(ம்) முதலான பிற்காலத்துத் தென்னிந்திய நூல்கள் பலவற்றிலே ஓவியக்கலை பற்றிய தனிப்பிரிவுகள் உள்ளன. தசிணாபதத்திலும் திராவிட தேசத்திலும் வாழ்ந்த ஓவியர்கள் இந்நூல்களிலே சொல்லப்பட்ட விதிகளுக் கமையச் சித்திரங்களை வரைந்தனர் என்பது ஓவியர்களின் பண்புகளினாலே உணரப்படுகின்றது.

கலைகளில் வல்லவரான பெண்கள் பரதம், சிற்பம், ஓவியம், சித்திரப்படங்களைத் தயாரித் தல், நளபாகம் முதலியனவற்றை விளக்கும் நூல்களிலே தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்று தாமோதர குப்தர் எழுதிய குண்டனீமதம் என்னும் நூல் குறிப்பிடுகின்றது. மேலும் அந்நூல் சித்திரசூத்திரம் பற்றியும் சொல்கின்றது. ஒரு வகையில் விஷ்ணுதர்மோத்திரம் பரதரின் நாட்டியசாஸ்திரத்திற்கு ஒப்பானது. அதிலே நடனம், சங்கீதம், கட்டடக்கலை, சித்திரம், சிற்பம் ஆகியன பற்றியும் அவற்றிற்கிடையிலான தொடர்புகள் பற்றியும் சொல்லப்படுகின்றது. நுண்கலைகள் எல்லாம் ஒரு பொதுவான கலாதத்துவத்தின் வயப்பட்டவை என்ற கருத்து அதிலே வலியுறுத்தப்படுகின்றது.

ஓவியங்களை சத்ய, வைணிக, சாகர, மிஸ்ர என்ற நாண்கு பிரிவுகளாக அது வகை செய்கின்றது. வண்ணமெழுக்கினை வர்த்தனம், பத்ரஜ, ரைகீக, பிந்துஜ என்னும் தலையங்கங்களின் கீழ் வர்ணிக்கின்றது. ஓவியங்களிற் காணப்படக்கூடிய சிறப்புக்களும் குறைகளும் அதிலே ஆராயப்படுகின்றன. ஓவியக் கலையினை நாராயணர் உருவாக்கினார் என்று சித்திர சூத்திரம் குறிப்பிடும். தனது சூத்திரத்தில உருவத்தை வரைந்து அதன்மூலமாக ஆதி சௌந்தரியான தேவக்கன்னியை நாரயணர் படைத்தார் என்று விஷ்ணு தர்மோத்திரத்திற் கூறப்படுகின்றது. அதன்பின்பு ஓவியக்கலையினை நாராயணரிடமிருந்து பயின்ற விஸ்வகர்மன் பிரபஞ்சத்தின் இயக்கத்திற்கு ஆதாரமான தத்துவத்தைச் சித்திரக் கோலமாக விளக்கினார் என்று சொல்லப்படுகின்றது.

சித்திரச்சூத்திரத்திலே ஓவியங்களில் இடம்பெறக்கூடிய ஐந்து வகையான ஆடவர்களைப் பற்றியும் பெண்களைப் பற்றியும் விளக்கப்படுகின்றது. ஹம்ஸ, பத்ர, மாலவ்ய, ருஜக, சஸக என்னும் ஐந்து வகையான ஆடவர்களை அது வர்ணிக்கின்றது. குந்தலம் (நீண்ட மிருதுவான), தக்சிணாவர்த்தம் (வலப்பக்கமாகச் சுருண்ட), தரங்கம் (அலைபோன்ற), வாரிதாரம்(நேராகவும் மிகுதியாகவும் காணப்படும்) ஜடாடசாரம்(சுருண்டு மிகுந்திருக்கும்), என்னும் ஐந்து விதமான கேசங்கள் பொருந்திய மாதரின் வடிவங்கள் பற்றிச் சித்திரசூத்திரம் குறிப்பிடுகின்றது. நயத்தின் இயல்புகளும் அதன் வகைகளும் சொல்லப்படுகின்றன. வில்போல் வளைந்த நயனம்(சாப கிருதி), நீலோற்பல வண்ணமான உத்பலபத்திரபு மீன் விழி போன்ற(மத்ஸ்யோதா) தாமரை மலர் இதழ் போன்ற(பத்மபத்ரநிதி), பூகோளம் போன்ற(சானாகிருதி) என்னும் வெவ்வேறு விதமான நயனங்களைப் பற்றிய வர்ணனைகள் இந்நூலிலே வருகின்றன. இவ்வண்ணமாகவே ஆண்களும், பெண்களும் நிலைகொண்டிருக்கும் வெவ்வேறு விதமான கோலங்களும் (ஸ்தானம்) வர்ணிக்கப்படுகின்றன.

வித்திசம்ஸ்காரம் விஷ்ணு தர்மோத்திரத்திலே விரிவாக விளக்கப்படுகின்றது. ஓவியங்கள் வரைவதற்கு முன் அதற்கு வேண்டிய தளத்தைச் சுவரிலே தெரிந்து, அதனைச் செம்மைப்படுத்துவதே வித்திசம்ஸ்காரமாகும் .மேலும் மூல வண்ணங்கள், கலப்பு வண்ணங்கள் என்பனவும் அவற்றை உற்பத்தியாக்கும் விதங்களும் மெழுகிடும் முறைகளும் விவரிக்கப்படுகின்றன.

போஜராஜன் எழுதிய சமராங்கணசூத்ரதாரா என்னும் சிற்ப சாஸ்திரத்தில் ஓவியம் பற்றி ஒரு தனிப் பிரிவு உண்டு. அது ரசக் கோட்பாட்டின் அடிப்படையில் ஓவியங்களை வரையும் முறையினை விளக்குகின்றது. கல்யானிச் சாளுக்கிய மன்னரான சோமேஸ்வரன் தொகுத்த அபிலாஷிதார்த்த


*With Best Compliments From:*

**K. M. T. Trade Centre**

22, St. Jhones Road,
Colombo 11
Tel: 433020, 424913

சிந்தாமணி கலைகளைப் பற்றிய பெருங் களஞ்சியமாகும். அதிலே ஓவியக்கலை பற்றிய பகுதி உண்டு. வித்திசம்ஸ்காரம், வண்ணக்குழம்புகளை உற்பத்தி செய்தல், பலவகைத் தூரிகைகள் முதலானவை பற்றிய விவரங்கள் அதிலே காணப்படுகின்றன. நாட்டிய மண்டபத்துச் சுவர்களிலும் விதானத்திலும் வரையப்படும் சித்திரங்களைப் பற்றிய வர்ணனைகளும் காணப்படுகின்றன. பல வண்ணங்களை வெவ்வேறு அளவுகளிற் கலந்து ஒளி, நிழல் ஆகியவற்றை ஏற்படுத்தும் விதங்கள் இந்நூலிலே விளக்கப்படுகின்றன. தங்கத்துகள்களைக் கலப்பதன் மூலமும் நெருப்பினாற் காய்ச்சுவதன் மூலமும் ஒளியூட்டும் முறைகள் விளக்கப்படுகின்றன. சித்திரங்களுக்குரிய ஸ்தானங்களும் பாவசித்திரம், வித்திசித்திரம், அவித்த சித்திரம் போன்ற வகைகளும் விவரிக்கப்படுகின்றன.

16ம் நூற்றாண்டிற் குமாரர் எழுதிய சில்பரத்தினம் என்னும் நூலில் சித்திரலக்ஷணம் என்ற ஒரு பகுதி உண்டு. அதிலே சித்திரம், அர்தசித்திரம், சித்திராபாஸம் என்னும் மூன்று வகையான ஓவியங்கள் பற்றிச் சொல்லப்படுகின்றது. வெள்ளை, மஞ்சள், சிவப்பு, கருமை, நீலம் என்னும் வண்ணக் கலவைகள் பற்றியும் விவரங்கள் காணப்படுகின்றன. பலவகையான தூரிகைகள் பற்றியும் ஒளியூட்டும் முறைகள் பற்றியும் இந்நூலிலே விளக்கப்படுகின்றது.ரசி சித்திரம், தூலி சித்திரம் என்னும் இருவகையான ஓவியங்களைப் பற்றி இந்நூல் விவரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.இரசாயனப் பொருட்கள் கலந்த வண்ணக் கலவையினால் மெழுகப்பட்ட சித்திரங்கள் ரசச் சித்திரங்கள் எனப்படும். வண்ணப் பொடிகளினால் நிறம் ஊட்டப் பெற்ற ஓவியங்கள் தூலிச்சித்திரம் என்னும் வகைக்குரியவை.

ஓவியக்கலை பற்றி நாரதச் சிற்பத்திலே காணப்படும் செய்திகள் சிறப்பானவை. அதிலே சித்திர சைலா, சித்திராலயகிருதி ரஜனாவிதி என்னும் இரண்டு அத்தியாயங்கள் உள்ளன. இவற்றுள் முன்னையது இந்தியாவிலே காணப்பெற்ற சித்திரக்கலைகள் பற்றிய விவரங்களைக் கொண்டுள்ளது. மற்றைய அத்தியாயம் சித்திரங்களைத் தரையிலுள்ளவை (பௌமிக). சுவரிலுள்ளவை(கட்ஜக). விதானங்களில் உள்ளவை(ஊர்த்வக). என மூன்று பிரிவுகளாக வகை செய்கின்றது.



*With Best Compliments From:*

N. S. P. S. (New Sai Premawardhana Stores)

No. 6, St. Johnes Road,
Colombo 11
Tel: 335719

# திருவொற்றியூர் தியாகராசர் திருக்கோயில்

செல்வி : T.வைதேகி (பேராசிரியை)
(M.A, M.Phill) சென்னை.

1. அமைவிடம்

இக்கோயில், சென்னையிலிருந்து எண்ணூர் செல்லும் சாலையில், சென்னைக்கு வடக்கே எட்டுக் கிலோமீட்டர் தொலைவிலுள்ள திருவொற்றியூரின் நடுவில் கிழக்கு நோக்கியவாறு 5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தினின்றும், கடற்கரை ஓரமாக மணலி செல்லும்சாலை, இவ்வூரின் வழியாகச் செல்கிறது. சென்னை மைய அகல இருப்புப் பாதை திருவொற்றியூர் வழியாக வடக்கு நோக்கிச் செல்கிறது. திருவொற்றியூர் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து இக்கோயில் அரை கிலோமீற்றர் தொலைவிலுள்ளது.

2. பெயர் விளக்கம்

திருத்தலப்பெயர் விளக்கம்

இத்தலத்திற்குப் புராணத்தின் அடிப்படையில் கூறப்படும் பெயர் விளக்கங்களை முதலில் காணலாம்.

1. ஒற்றியூர் : ஒரு பதுமகற்பப் பிரளய காலத்தில் அனுக்கிரகத்தின் பொருட்டுத் தவம் செய்த பிரம்மதேவரது யோக அக்கினி மையத்தில் பரமசிவன் ஒரு சித்திரவடிவங் கொண்ட பலகை உருவத்தில் தோன்றினார். அந்த யோகாக்கினியே ஒரு திருக்கோயிலாகவும், அப்பலகையே அக்கோயிலின் சிவலிங்கத் திருமேனியாகவும் விளங்கின. அப்போது அச்சிவலிங்கத்தில் எழுந்தருளிய சிவபெருமான் பிரளய வெள்ளத்தை விலகச் செய்ததால் இத்தலம் ஒற்றியூர் எனப்பெயர் பெற்றது. (ஒற்றுதல் - விலக்குதல்)

2.இங்குள்ள சிவலிங்கத்திருமேனி புற்று மண்ணால் ஆனது ஆதலின், இப்பெருமானுக்கு அபிடேகங்களை இல்லை. இத்திருமேனியில் புனுகு, ஐவ்வாது கோரோசனம், கஸ்தூரி, குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூரம் முதலிய வாசனைப் பொருள்களே சாத்தப் பெறுகின்றன. இப்பொருள்கள் திருமேனியின் மீது பூசப்படுவதாலும் ஒற்றீசர் என இறைவர் அழைக்கப் பெறுகிறார் (ஒற்று- பூச்சு) இவ்விறைவர் பெயரே பின்னர் தியாகராசர் என்றாயிற்று.

3. வாசுகி என்னும் நாகம் உபமன்னியரிடம் தீட்சை பெற்றுத் திருவொற்றியூரில் வந்து, அன்புடன் இறைவனை வழிபட்டு வந்த காரணத்தால் இறைவர் சிவலிங்கத் திருமேனியினின்றும் வெளிப்பட்டு அந்நாகத்தைத் தம்மிடம் ஒடுக்கிக் கொண்டதாலும் இறைவர் ஒற்றீசர் என்னும் பெயர் பெற்றார். இவ்வூருக்கும் ஒற்றியூர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. (ஒற்றுதல் - ஒடுக்கிக் கொள்ளுதல், ஒற்கம் - ஒடுக்கம்)

4. இவ்வூரைக் காளத்தியோடு ஒப்பிடுவர். காளத்தியில் சிலந்தியும் பாம்பும் வழிபட்டது போன்று இங்கும் சிலந்தியும், வாசுகி என்னும் பாம்பும் சாத்திவனமாகிய இவ்விடத்தில் பூசித்தன என்பதால் பாம்பும் அத்திவனமாகிய இவ்விடத்தில் பூசித்தன என்பதால் இதுவும் காளத்தி என்று கருதப்பட்டது.

(இங்கு வழிபட்ட சிலந்தியின் வடிவம் துர்க்கையின் கோட்டத்திற்கு மேலுள்ள கொடுங்கையின் கூட்டில் செதுக்கப்பட்டுள்ளது)

*With Best Compliments From:*

**Shaan Hardware**

149, Jempatah Street,
Colombo 13
Tel: 335652

## திருக்கோயில் பெயர் விளக்கம்

இக்கோயிலுக்கு ''குணாலயம்'' என்னும் பெயரும் அமைந்துள்ளது. இறைவருக்கு எண்குணங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவை: தன்வயத்தனாதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை வரம்பற்ற இன்பமுடைமை ஆகியவையாகும். இங்கு எட்டு அருட் குணங்களையுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடம் ஆதலின் இக்கோயில் ''குணாலயம்'' எனப் பெயர் பெற்றுள்ளது.

ஆலயம் என்ற சொல்லுக்குப் பக்குவம் பெற்ற உயிர்கள் (ஆன்மாக்கள்) இறைவனோடு இலயிக்கின்ற இடம் என்னும் பொருள் காணப்படுகிறது. (ஆ-பசு, உயிர்-ஆன்மா, லயம் - ஒருக்கம்). எண் குணங்களையும் கொண்ட இறைவன் கோயில் குணாலயமாகும்.

### இக்கோயிலில் வழிபட்டுப் பேறுபெற்றவர்கள்:-

1. நந்திதேவர்

நந்திதேவர் தாம் திருக்கயிலாயத்தில் சிவபெருமான் நடனம் கண்டமை போலவே சிவபெருமான் அமர்ந்தவாறு நாடோறும் புரியும் நடனத்தையும் காண அருள் புரியுமாறு வேண்டிக்கொள்ள, அவர் விரும்பிய அவ்வரத்தைச் சிவபெருமான். அவருக்கு அருளினார். நந்திதேவர் கண்ட அத்திருநடனத்தைத் திருமால் நான்முகன், உரோமசமுனிவர் ஆகியோரும் கண்டுய்ந்தார்கள். இத்தலத்தில் வாசுகி, ஆதிஷேசன், வான்மீகி, இலவன் தொண்டைமான் முதலியோரும் பூசைசெய்து திருவருள் பெற்றனர். அகத்திய முனிவரும் சிவபெருமான் திருமணக் கோலத்தை இக்கோயிலில் கண்டுகளித்தார். இக்காட்சி இக்கோயில் பெருந்திருவிழாவில் கொண்டாடப்படுகின்றது.

2. கலியநாயனார்

தொண்டை நாட்டில் திருவொற்றியூரில் தயிலவினைத் தொழிலுடைய வணிகர் மரபிலே தோன்றியவர் கலிய நாயனார். கோடிக் கணக்கான செல்வமுடைய இவர் திருவொற்றியூர் திருக்கோயிலில் உள்ளும் புறமும், அல்லும் பகலும் திருவிளக்கிடும் திருத்தொண்டின் பெருமையை வெளியுலகிற்குப் புலப்படுத்தத் திருவுளங்கொண்ட சிவபெருமான் திருவருளால் இவரது செல்வம் அனைத்தும் குறைய இவருக்கு வறுமைநிலை உண்டாயிற்று. அந்நிலையில் தமது மரபிலுள்ளோர் தம் எண்ணெயை வாங்கி விற்று அதனாற் கிடைத்த பொருளால் தாம் செய்யும் திருவிளக்குப் பணியை வழுவாது செய்து வந்தார். பின்பு எண்ணெய் தருவார் கிடாமையால் கூலிக்கு செக்காடி அக்கூலி கொண்டு விளக்கெரித்தார். வேலையாட்கள் பெருகியதால் தம்மைக் கூலிக்கு அமர்த்திக் கொள்வார், இல்லாமையால் வீடு முதலிய பொருட்களை விற்றும் முடிவில் தம் மனைவியரை விற்பதற்கு நகரெங்கும் விலைகூற அப்பெண்மணியை வாங்குவாரில்லாமையால் மனந்தளர்ந்தார். திருவிளக்கேற்றும் வேளையில் ஒற்றியூர்த் திருக்கொயிலுக்குச் சென்று ''திருவிளக்குப்பணி'' தடைப்படின் யான் இறந்து படுவேன் எனத் துணிந்து எண்ணெய்க்கு ஈடாகத் தமது குருதியை அளிப்பதற்காகக் கழுத்தை அரிந்தார். அந்நிலையில் அருட் கடலாகிய சிவபெருமான் விடை மீது தோன்றியருள் உடம்பின் ஊறுநீங்கப் பெருமானைத் தலைமேற் கைகுவித்து வணங்கி நின்றார். சிவபெருமான் அவரைப் பொற்புடைய சிவபுரியில் பொலிந்திருக்கப் புரிந்தார்.

3. திருநாவுக்கரசு நாயனார்:

திருநாவுக்கரசு நாயனார் திருவான்மியூரிலும் உழவாரத் திருத்தொண்டும் தேவாரம் பாடும

With Best Compliments From:

**Lady Hill Textorium**

215, Galle Road,
Dehiwela.
Tel: 715629

சிவனகங்கரியம் மேற்கொண்டு திருவொற்றியூரை அடைந்தார். அவ்வூரில் அவரை எதிர்கொண்டு அழைத்தார்கள். அங்கு கோயிலில் தொழுது வணங்கிச் சிவ வழிபாட்டில் திளைத்தார். திருவொற்றியூரில் பல நாட்கள் தங்கியிருந்து திருவிருத்தங்கள், திருக்குறுந்தொகைகள், திருநேரிசைகள், திருத்தாண்டகங்கள் முதலியவற்றை இயற்றியருளினார். இதன் பின்னர் இவர் திருப்பாகுவை அடைந்தார்.

4. திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தர் திருக்காளத்தி அப்பரை வணங்கி திருவேற்காடு, திருவலிதாயம் முதலிய தலங்களில் வழிபட்டுத் திருவொற்றியூரில் மக்கள் எதிர்கொள்ள இவ்வூரை எய்தினார். இங்குள்ள கோபுரத்தைக் கண்டவுடன் ''விடையவன்'' எனத் தொடங்கும் பதிகம் பாடி கோபுர வாயிலை அடைந்தவுடன் அப்பதிகத்தில் திருக்கடைக் காப்புப் பாடினார். இப்பதிகம் ஒன்றே நாம் இன்றும் ஓதி இன்புற அமைந்துள்ளது. இங்கு இவர் சில நாட்கள் தங்கி வழிபாடியற்றிப் பின்னர்த் திருமயிலைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

5. ஐயடிகள் காடவர்கோன்

காடவர் என்பது பல்லவர் குலத்தாருக்கு வழங்கப்பட்ட பொதுப் பெயராகும் சிவனடியார்களுள் ஒருவரும். பல்லவ வேந்தர்களுள் சிறந்து விளங்கியவருமாகிய கழற்சிங்க நாயனாரைப் போற்றக் கருதிய சுந்தரமூர்த்தி சுவாமிகள்

''கடல் சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்,,

எனத் திருத்தொண்டத் தொகையில் போற்றிப் பாடியுள்ளார். இம்மன்னனே காஞ்சியில் கயிலாய நாதர் திருக்கோயிலைக் கட்டியவன். இவன் தந்தையாகிய முதலாம் பரமேசுவரன் கி.பி. 670 ஆம் ஆண்டு முதல் கி.பி. 685 வரை ஆட்சியிலிருந்த கூரம் ஊருக்குப் பரமேஸ்வர மங்கலம் என்று பெயர் தந்து அதில் ''விச்சாவிநீத பல்ல பரமேசுவர கிரகம்'' எனும் சிவன் கோயிலைக் கட்டினான். மாமல்லபுரத்தில் இவன் பாட்டனாராகிய நரசிம்மவர்மனால் கட்டப்பெற்றதும் இவனால் முடிக்கப்பட்டதுமாகிய ''அத்தியந்த காம பல்லவேச்சுரகிரகம்,, என்னும் சிவன் கோயிலை அடுத்த கணேசராலயம் என விளங்கும் கற்கோயிலில் பொறிக்கப்பட்ட வடமொழி சுலோகங்கள் இவரைப் பக்தி நிறைந்த மனத்தில் இருப்பவனாகிய சிவனை இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருப்பவர் என்றும் இவ்வழிபாட்டில் பேரார்வம் கொண்டவர் என்றும் இவரது சிரசின் மீது சந்திரன் எப்பொழுதும் எழுந்தருளியுள்ளான் என்றும் போற்றுகின்றன. இப்பரமேசுவரன் சிவனருளால் மெய்யுணர்வு கைவரப் பெற்றுத் தமது அரசுரிமையை இரண்டாம் நரசிம்ம பல்லவனிடம்ஒப்புவித்து விட்டுச் சிவநெறியை மேற்கொண்டு திருநெறியாகிய தமிழை வளர்க்கும் சிவஞானியாய் ஆனார்.

இவர் அரசியலாட்சியைத் துறந்த பின்னர் தில்லைச் சிற்றம்பலம் முதலாகவுள்ள சிவன் கோயில்கள் பலவற்றிற்கும் நேரில் சென்று அவற்றை வணங்கி ஒவ்வொரு தலத்திற்கும் ஒவ்வொரு வெண்பா பாடிப் போற்றினார். இப்பாடல்கள் ஷேத்திரத் திருவெண்பா என்ற பெயரில் பதினொராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. இம்முறையில் இவர் திருவொற்றியூருக்கு வந்து ஒரு வெண்பா பாடியுள்ளார். அப்பாடல்

தஞ்சாக மூவுலகும் ஆண்டு தலையளித்திட்டு
எஞ்சாமை பெற்றிடினும் யான் வேண்டேன் நஞ்சம்
கரந்துண்ட கண்டர் தம் ஒற்றியூர் பற்றி
இரந்துண்(டு) இருக்கப் பெறின் என்பதாகும்

With Best Compliments From:

**G. P. Moorthy**

No. 32/A. Subodoroms Road,
Dehiwela.

6. சுந்தரமூர்த்தி நாயனார்

திருக்கயிலாயத்தில் உமையம்மையாருக்குப் பணிபுரிந்து வந்தவர்கள் கமலினி அநிந்திதை என்னும் சேடியர் இருவர். அங்கு அப்போது சிவத்தொண்டு புரிந்துவந்த ஆலால சுந்தரரை அவ்விருவரும் காதலித்தார்கள். இதன் விளைவாக ஆலாலசுந்தரர் சுந்தரமூர்த்தி நாயனார் ஆகவும், கமலினி திருவாரூரில் பரவையாராகவும், தோன்றிச் சுந்தரரை மணந்தார். மற்றவராகிய அநிந்திதை தொண்டை நாட்டில் ஞாயிறு ஊரில் ஞாயிறு கிழார் என்னும் வேளாளருக்குத் திருமகளாகத் தோன்றினார்.

சங்கிலியார் நாள்தோறும் திருவொற்றியூர்க் கோயில் மண்டபத்தில் அமர்ந்து திருமாலை தொடுத்து அங்கு எழுந்தருளியிருக்கும் பெருமாளுக்குச் சாத்தி வரும் சிவத் தொண்டராயினர். ஒருநாள் திருவொற்றியூர்ப் பெருமானை வழிபட எழுந்தருளிய சுந்தரரைக் காணும் வாய்ப்புப் பெற்றார்.

இறைவகுத்த வழிமுறையில் சுந்தரர் சங்கிலியாரை மணந்துகொள்ள விரும்பினார். இறைவன் கட்டளைக்கேற்பச் சுந்தரர் திருஒற்றியூர் ஈசன் கோயில் மகிழ மரத்தடியில் ``உன்னைவிட்டுப் பிரியேன்`` எனச் சங்கிலியார்க்கு உறுதிமொழி தெரிவித்த பின்னர் இறைவன் ஆணைக்கேற்ப அடியார்கள் கூடிப் பலவகைச் சிறப்புக்களுடன் சுந்தரர்க்குச் சங்கிலியாரை மணம் செய்வித்தார்கள். சுந்தரர் சங்கிலியாரோடு சிலகாலம் வாழ்ந்த பின்னர் திருவாரூருக்குச் செல்ல விருப்பம் கொண்டார். இவ்விருப்பத்திற்கேற்பத் திருவொற்றியூரைக் கடந்து அவர் அடிபெயர்த்து வைத்தார். சங்கிலியாருக்குச் சுந்தரர் செய்த சபதம் மீறப்பட்டதால் சுந்தரர் கண்ணொளி மறைந்தது.

சுந்தரர் திருவொற்றியூரில் ``சூளுரவு மறுத்ததால் இவ்வினை எய்தியது`` என்றெண்ணி ``எம்பெருமானே! இத்துயர் நீங்கப்பாடுவேன்,, என்று நினைத்து ``அழுக்கு மெய்கொடு உன்திருவடி அடைந்தேன்,, எனும் திருப்பதிகத்தை திருவொற்றியூர்ப் பெருமான் மீது பாடியருளினார்.

இதன் விளைவாக வருந்திய சுந்தரர் திருவெண்பாக்கத்து இறைவனை வழிபட்டு ஊன்றுகோல் பெற்றுக் காஞ்சிபுரத்து இறைவரை வழிபட்டு இடக்கண் பார்வை பெற்று, திருத்துருத்தூர் இறைவரைத் தொழுது திருக்குளத்தில் நீராடி உடற்பிணி நீங்கப் பெற்றார். இதன் பின்னர்த் திருவாரூரையடைத்து இறைவரைப் பணிந்து வலக்கண் பார்வை பெற்றார்.

பின்னர் பல தலங்களுக்குச் செல்லும் முறையில் திருக்காளத்தி யிலிருந்து திருப்பருப்பதம், திருக்கேதாரம் இவற்றை அடைந்து பாடிச் சில நாட்கள் தங்கியிருந்து பெருமான் வீற்றிருக்கும் பல தங்களையும் வணங்கிக் கொண்டு திருவொற்றியூரை அடைந்தார். அடியவர்கள் மங்கலப் பொருட்கள் முதலியவற்றுடன் எதிர்கொள்ளத் திருக்கோயிலை அடைந்து ``பாட்டுப் பாடிப்பரவித்திரிவார்`` எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார்.

7.. திருவெண்காட்டடிகள் (பட்டினத்தார்)

இவர் சோழநாட்டின் கடற்றுறைப் பட்டினமாகிய காவிரிப் பூம்பட்டினத்தில் பிறந்தமையால் பட்டினத்துப் பிள்ளையார் எனவும் வழங்கப்பெறுவர். இவர்க்குப் பெற்றோர் இட்ட பெயர் திருவெண்காடர் என்பது. செல்வக் குடும்பத்தில் பிறந்து மனைத்தக்க மாண்புடைய மங்கையை மணந்து மணவாழ்க்கை நடத்திய இப்பெரியார் காட்டடிகளெனவும், பட்டினத்தடிகளெனவும் போற்றப் பெறுவாராயினர்.

இவரது வரலாறு வியக்கத்தக்க வகையில் அமைந்துள்ளது. காவிரிப் பூம்பட்டினத்தில் சிவசேகர் என்ற வணிகர் ஞான கலாம்மை என்ற மங்கையை மணந்து மனையறம் நிகழ்த்தி வந்தார். இறைவன்


*With Best Compliments From:*

**Tissa Vegitarian Hotel**

215, Galle Road, Dehiwela.
Tel: 726321

அருளால் திருவெண்காடர் இவர்களுக்கு மகனாகத் தோன்றினார். வெண்காடர்க்கு ஐந்து வயது நிரம்பும் நிலையில் அவர் தம் தந்தையாராகிய சிவநேசர் இறைவனடி சேர்ந்தார். அன்னையார் திருவேண்காடரைப் பள்ளியிலமர்த்திக் கல்வி பயிலச் செய்தார். கல்வி கேள்விகளில் வல்ல திருத்தொண்டர் கற்றதனாலாய பயன் கடவுளடி தொழுதெய்தலே எனத் தெளிந்தார். ஒருநாள் சிவபெருமான் வெண்காடர் கனவில் அந்தணராகத் தோன்றி ''நாளை நீ திருவெண்காடு சென்று இறைவனை வழிபடுக அங்கு வேதியரொருவர் வந்து நினக்குச் சிவதீட்சை செய்வார்'' எனச் சொல்லி மறைந்தனர்.

வெண்காடரும் தாம் கண்ட கனவை அன்னையாருக்குச் சொல்லி மறுநாட் காலை திருவெண் காட்டை அடைந்தார். அந்நிலையில் கனவில் தோன்றிய அந்தணரே அங்கு வந்து திருவெண் காடர்க்குச் சிவதீட்சை செய்து தாம் கொண்டு வந்த சம்புடத்தை அவர் கையில் தந்தருளினார். அச்சம்புடத்தை வெண்காடர் வாங்கிய அளவில் அதுதானே திறந்து கொண்டது. இதனுள்ளே சிவலிங்கத் திருமேனியும் விநாயகர் திருவுருவமும் இருந்தன. திருவெண்காடர் ஆசிரியர் கற்பித்த வண்ணம் அத்திருவுருவங்களை நாள்தோறும் பூசித்து வருவராயினர். இறைவன் வெண்காடர் மாளிகையில் பொன்னினொடு நவமணிகள் பொலிந்து விளங்கச் செய்தருளினான். திருவெண்காடர் சிவகலையென்னும் நங்கையை மணந்து மனையறம் நடத்தி வந்தார்.

திருவிடை மருதூரில் மகாலிங்க பெருமானை வழிபடும் சிவகருமரென்பார் சுசீலையம்மையை மணந்து அரன்பூசையிலும் அடியார்க்குத் திருவமுதளித்தலிலும் தம்மிடத்திருந்த பொருளைச் செலவிட்டு வந்தார். வறுமையால் வாடிய அவ்வேதியரது வருத்தத்தை நீக்கத் திருவுளங்கொண்ட இடைமருதீசன் அவரதுகனவில் தோன்றி ''அன்பு மிக்கீர்! நமது தீர்த்தக் கரையிலுள்ள வில்வமரத்து அடியில் நாம் ஒரு குழந்தையாக வந்துள்ளோம். நீவிர் அக்குழந்தையை எடுத்துக் கொண்டு காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்து வெண்காடரென்னும் வணிகரிடம் கொடுத்து அக்குழந்தையளவு நிறையுள்ள பொன்னைப் பெற்று உமது வறுமையைத் தவிர்ப்பீராக'' என்று கூறி மறைந்தார். அம்மொழியினைக் கேட்ட சிவசருமர் தம் மனைவியுடன் குறிப்பிடப்பட்ட வில்வ மரத்தை அடைந்து அங்கு ஒரு குழந்தையைக் கண்டார். அதையெடுத்து வந்து அவர்கள் அதை விற்க மனமிலராய் வீடு திரும்ப எண்ணினராயினும் இறைவன் அருளால் வழிதவறிச் சென்று முடிவில் காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தார்கள். அவர்களது வரவினை இறைவன் கனவிடைச் சென்று அறிவிக்க உணர்ந்த திருவெண்காடர் அவர்களை வரவேற்று அக்குழந்தையளவு நிறையுள்ள பொன்னைக் கொடுத்துக் குழந்தையைப் பெற்றுக் கொண்டார். பொன்பெற்ற சிவசருமர் மனைவியுடன் திருவிடை மருதூரை அடைந்து இறைவனை வழிபட்டு வாழ்ந்திருந்தார்.

திருவெண்காடர் இடைமருதீசனருளாற் கிடைக்கப்பெற்ற குழந்தைக்கு மருதபிரான் எனப் பெயரிட்டு வளர்ந்து வந்தார். பெற்றோர் மகிழப் பல அற்புதங்களை நிகழ்த்திய மருதபிரான் வணிகத்துறையில் வல்லவராய்ப் பெரும் பொருளீட்டித் தந்தையை மகிழ்வித்தார். அவர் ஒரு முறை வணிகர் சிலருடன் கடல் கடந்து வாணிகம் நடத்திய பொழுது கிடைத்த ஊதியத்தை எல்லாம் திருக்கோயிற் பணிக்கும் சிவனடியார்க்கும் செலவிட்டு எஞ்சிய பொருளுக்கு வரட்டியும், அவல் கடலையும் வாங்கிக் கொண்டு ஊா திரும்பினார்.

மருத பிரானைக் காணவிரும்பித் திருவெண்காடர் தம்மாளிகையுட் சென்று எங்குந் தேடினார். அந்நிலையில் அவருடைய மனைவியார் எதிரே வந்து 'நம்புதல்வன், மருதபிரான் இப்பெட்டியை தங்களிடம் சேர்க்கும்படி சொல்லி வெளியே சென்றான்''

*With Best Compliments From:*

**Jeya Book Shop**

Chinese Gift Palace
78, Galle Road,Colombo 06
Tel: 594931

என்று கூறி அப்பெட்டியை அவரிடம் கொடுத்தார். திருவொண்காடர் அப்பெட்டியைத் திறந்து பார்த்தார். அதனுள்ளே காதற்ற ஊசியும் ஓலைச் சுருளொன்றும் இருந்தன. ''காதற்ற ஊசியும் வாராது காண்கடை வழிக்கே,, என்ற தொடர் ஓலையில் எழுதப்பட்டிருந்தது. அதனைப் படித்த திருவெண்காடர் இவ்வுலக நிலையாமையை நன்குணர்ந்தார். உணர்ந்த அப்பொழுதே துறவறத்தை மேற்கொண்டார். தம்தலைமைக் கணக்காளராகிய சேந்தனாரை அழைத்து தமது நிதி அறையில் அதிலுள்ளவற்றையெல்லாம் அனைவரும் எடுத்துக் கொள்க எனத் திறந்து விடும்படி கட்டளையிட்டார். தமது மாளிகையைத் துறந்துவிட்டு ஊரம்பலத்தை அடைந்து சிவயோக நிலையில் அமர்ந்திருந்தார்.

திருவெண்காட்டிகள் வீடுதோறுஞ் சென்று பிச்சையேற்றுண்டதைக் கண்டு வெறுப்புற்று அடிகளைக் கொல்ல துணிந்த அவர் தமக்கையர், நஞ்சு கலந்த அப்பமொன்றை அவர் உண்ணுமாறு சொல்ல அதையுணர்ந்த அடிகள், அப்பத்தைப் பிட்டு..... அதன் ஒரு பாதியை பத் தமக்கையார் குடியிருக்கும் வீட்டில் செருகி ''தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும்'' என்றார். அவ்வளவில் அவ்வீடு தீக்கிரையாயிற்று. சிலநாட்கள் கழித்து அடியார் அன்னையார் சிவபதமடைந்தார். அவருடலை அடக்கஞ் செய்யக் கருதிய சுற்றத்தார் அதனைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று வழக்கம் போல் விறகுகளை அடுக்கி அவற்றின் மேல் வைத்தார்கள். அந்நிலையில் அங்கு சென்ற திருவெண் காட்டடிகள் விறகுகளை நீக்கி அவற்றுக்கு மாறாக வாழைப்பட்டைகளை அடுக்கிச் சில பாடல்களைப் பாடி தமது ஞானத் தீயால் தாயார் உடல் வெந்து தீயாகும்படி செய்து ஈமக்கடனை நிறைவேற்றினார். திருவிடை மருதூர் இறைவனை வணங்கும் நோக்கோடு அவ்வூரை அடைந்து சில நாட்கள் தங்கியிருந்தார்.

ஒருபொழுது பத்திரகிரி மன்னனது அரண்மனையில் புகுந்து அணிகலங்கைளத் திருடிய கள்வர்கள் இருட்டிலே அதனைப் பட்டினத்தடிகள் மீது தவறுதலாகப் போட்டு விட்டனர். அடிகள் கழுத்தில் சாத்தியமாலை இருப்பதைக் கண்ட காவலர்கள் அடியவரை கழுமுன் நிறுத்தினர். அடிகள் தன் முன் உள்ள கழுமரத்தைப் பார்த்து ''என் செயலாவது யாதொன்றுமில்லை'' என்ற பாடலைப் பாடினர். உடனே கழுமரம் தீப்பற்றி எரிந்தது. இதனை உணர்ந்த மன்னன் தன் பிழையைப் பொறுத்தருள வேண்டி அடிகளைப் பணிந்தான். தனது அரசைத் துறந்து அவரது சீடனாயினான். அடிகள் தனது மாணவனாகிய பத்திரகிரியாரைத் திருவிடை மருதூருக்குச் செல்லப் பணித்து தாம் பல தலங்களை வணங்கச் சென்றார்.

பத்திரகிரியார் நாடோறும் பிச்சை ஏற்று வந்து தம் ஆசிரியருக்கு கொடுத்த பின் தாம் உண்டு எஞ்சியதைப் பசியால் வருந்திய அங்கிருந்த பெண் நாய்க்கு இட்டார். அன்றுமுதல் அந்நாய் அவரைப் பிரியாதிருந்தது. அவ்வூரில் பல அதிசயங்களை நிகழ்த்திய அடிகளார் அங்கிருந்து நீங்கி திருவெண்காடு சென்று சேந்தனாரைச் சிறை மீட்டருளினார். சீர்காழி, தில்லை, அண்ணாமலை, காஞ்சி முதலிய தலங்கள்ளைப் பணிந்து போற்றித் திருவெற்றியூரை அடைந்து இறைவனை இறைஞ்சி வரும் நாளில் ஒரு நாள் கடற்கரையில் இடைச்சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கும் நிலையில் மணலில் மறைந்து சிவலிங்கமாய் முளைத்தனர். பட்டினத்தடிகளைக் குறித்து அறிஞர் பலரும் எழுதிவரும் வரலாறு இதுவேயாகும்.

பதினோராந் திருமுறையுள் திருவெண் காட்டடிகள் இயற்றியனவான கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபது என ஐந்து பிரபந்தங்கள் சேர்க்கப் பெற்றுள்ளன. இப்பனுவல்கள யாவும் சொற்செறிவும் பொருட பொலிவும் உடையனவாய்க் கற்பார்க்கு நவிலுந்தோறும் சுவைபயப்பனவாக உள்ளன. இப்பிரபந்தங்களை அன்றி

With Best Compliments From:

Kirupa Photo & Video

K. K. S Road, Mallakam,
3-2/1, Madangahawatta Lane, Colombo 06
Tel: 360669, 077-317132

அடிகள் பாடியனவாக வேறு பல பாடல்கள் பட்டினத்துப் பிள்ளையார் பாடல் திரட்டு என்று பெயருடன் வழங்குகின்றன. பதினோராந் திருமுறையில் திருவெண் காட்டடிகள் பாடிய பிரபந்தங்களும் மேற்குறித்த பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல் திரட்டிலுள்ள பாடல்களும் சொல்நடை பொருளமைதி என்பவற்றாற் பெரிதும் மாறுபட்டுள்ளன.

பதினோராந் திருமுறையில் சேர்க்கப் பெற்றுள்ள திருவெண்காட்டடிகள் பிரபந்தங்கள் ஐந்தும் சங்கச் சான்றோர் மேற்கொண்ட தூய செந்தமிழ் நடையில் அமைந்துள்ளன. எனவே ''பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல் திரட்டு'' என்ற பெயருடன் வழங்கும் பாடல் தொகுதி திருவெண்காட்டடிகளுக்கு நெடுங்காலம் பிற்பட்டுத் தோன்றிய வேறொருவரால் இயற்றப் பெற்றது என்பது நன்கு துணியப்படும்.

திருவெண்காடர் இயற்றிய திருவொற்றியூர் ஒருபாஒருபது என்னும் நூல் திருவொற்றியூரில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானது பொருள்சேர் புகழைப் பிரித்துரைக்கும் ஆசிரியப் பாவாகிய பக்திப் பாடல்களால் அந்தாதித் தொடையில் அமைந்த பனுவலாகும். இது சைவ சித்தாந்த உண்மைகளைத் தெளிவாக விளக்குகின்றது.

8. இராமலிங்க அடிகள்

1823 ஆம் ஆண்டு தோன்றிய இராமலிங்க அடிகள் தமது பன்னிரண்டாம் ஆண்டில் முறையான ஞான வாழ்க்கையைத் தொடங்கியபோது நாள்தோறும் திருவொற்றியூர் சென்று தியாகராஜப் பெருமானையும் வடிவுடையம்மையையும் வழிபட்டு வரத் தொடங்கினார். சென்னையை விட்டு நீங்கி முப்பத்தைந்தாம் வரை இருபத்து மூன்றாண்டு காலம் வரை அடிகள் ஒற்றியூரை வழிபட்ட வண்ணமிருந்தார்கள். இவர் பாடிய முதல் திருமுறை யிலுள்ள வடிவுடை மாணிக்கமாலையும், இங்கிதமாலையும், இரண்டாம் திருமுறையின் பெரும் பகுதியும், மூன்றாம் திருமுறை முழுவதும் ஒற்றியூரில் வழிபட்ட காலத்தில் பாடப் பெற்றவையாகும்.

9. பாம்பன் சுவாமிகள்

இந்நூற்றாண்டில் வாழ்ந்து சிவப்பேறு எய்திய குமரகுருபர பாம்பன் சுவாமிகள் திருவொற்றியூர்ப் பெருமானை வழிபட்டு அவர் மீது பாடலியற்றியுள்ளார்.

10 மறைமலையடிகள்

இந்நூற்றாண்டினராகிய தமிழ் கடல் மறைமலை அடிகளும் இப்பெருமானுக்கு வழிபாடியற்றித் துதிப்பாடல்கள் பாடியுள்ளார்.

11.. தியாகராஜர் சுவாமிகள்

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராகிய தியாகராஜ சுவாமிகள் திருவெற்றியூர்ப் பஞ்சரத்தின் கீர்த்தனைகளைப் பாடியுள்ளார்.

*With Best Compliments From:*

LITTLE ASIA EMPORIUM

317, 317A, Galle Road,
Colombo 06
Tel: 504470

# கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்

**உலகநாதர் நவரத்தினம்**
(B.A, Dip.in.Ed, MED(SL) MED(AUS)

''சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே

- திருநாவக்கரசர்-

சைவ சமயத்தின் அடிப்படையில் வாழும் நாங்கள், அச்சமயத்தின் அடிப்படை அம்சங்களில் போதியளவு தெளிவைப் பெற்றிருத்தல் அவசியமாகும். சைவத்தின் அடிப்படைகளை சரியாகத் தெரியாத கிரிகைகளிலும் தத்துவம் சார் விடயங்களிலும் மக்களை வழிப்படுத்த நினைத்தல், சமய வாழ்வுக்கு பொருத்தமானதாக அமைய மாட்டாது. இன்றைய சைவ மக்களைப் பொறுத்தவரையில், வாழ்வியல் தொடர்பான விடையங்களில் நிலைதடுமாறிச் செல்வதோடு மட்டுமல்லாது. வாழ்வியலின் அடிப்படை அம்சங்களை சரியாக வாழ்வில் கடைப்பிடிக்காமையால் சைவ நம்பிக்கையிலிருந்து விலகிச் செல்வதை அவதானிக்கின்றோம்.

எனவே இன்றைய தேவை, சைவ மக்களைப் பொறுத்தவரையில் வாழ்வியல் தொடர்பான மறுமலர்ச்சியை வேண்டி நிற்கின்றது.

நாயன்மார்களும், சைவமறுமலர்ச்சியும்

தமிழ் மக்களின் பாரம்பரிய நம்பிக்கைக்குரிய சைவத்துக்கு காலத்துக்குக் காலம் சவால்களிலிருந்தும் மிரட்டல்களிலிருந்தும் மக்களை வழிநடத்திச் செல்ல, பலர் உருவாகலும் கடந்த கால வரலாறுகளினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது. சங்கமருவிய காலத்தில் தோன்றிய சவால்கள் சைவத்துக்குள் பெருநெருக்கடிகளை உருவாக்கியது.

சைவத்துக்கு ஆட்சியாளர் மட்டத்திலும் பிறசமய மட்டத்திலும் தோன்றிய எதிரான சவால்களும் மக்களை ஒன்று திரட்டிப் போராடிய பெருமை பக்திமார்க்கத்துக்கு உரியதாகும். குறிப்பாகச் சைவநாயன்மார்கள் மக்களோடு ஒன்றித்த சைவத்தின் மானிடவியல் நோக்கிலான அடிப்படைகளை அறிமுகப்படுத்தியதால் மக்கள் மத்தியில் சைவம் நோக்கிய மானிடவியலை விளக்க முடிந்தது. சைவம் நிலைபெற்றது.

With Best Compliments From:
**Stelco Steel Centre**
10-E Quarry Road,
Colombo- 12
Tel: 434216, 338456. Fax: 472479

அன்பர் என்போர் யார்?

மானிட வாழ்வில், அன்பு என்பது அடிப்படையானது. இசைவான இன்பமான வாழ்வுக்கு, உயிர்களிடத்து அன்பு செலுத்தல், நாம் வாழ்க்கையில் கற்றுக்கொள்ள வேண்டிய விடயமாகும். பொதுவாக உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல், சைவத்தில் மிக அடிப்படையானது. இங்கு அன்பு என்பது, எந்தவித எதிர்பார்ப்புமின்றி உயிர்களின் மீது செலுத்தப்படும் அடிப்படையாகும். இங்கு அன்பர் என்போர் தாம் வாழும் சமூகத்திலுள்ள உயிர்களின் பால் செலுத்துகின்ற அன்பைப் பிரதிபலிக்கின்றனர்.

செந்நா பெரும்புலவன் வள்ளுவன், இறைவனின் எண்குணங்களை கோடிட்டுக் காட்டி தான் ஒரு சைவன் என்பதை எவ்வித ஐயத்துக்குமிடமின்றி வெளிப்படுத்தியுள்ளான் என சைவ அறிஞர்கள் கோடிட்டுக் காட்டுகின்றனர். வள்ளுவப் பெருந்தகை பதினாறு குறள்களை அன்பு என்னும் சொல்லை முதலாகக் கொண்டு ஆக்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அன்புடைமை என்னும் அதிகாரத்தில் இறுதிக் குறளை இவ்வாறு செய்தலின் நோக்கம் யாது?

> ''அன்பின் வழியதுயிர்நிலை அகிதிலார்க்கு
> என்பு தோல் போர்த்த உடம்பு''

இக்குறள் வழியாக உயிரின் அன்புசார் நிலையை வள்ளுவர் வெளிப்படுத்துகின்றார்.

**அன்பருக்கு அன்பர்**

நாவுக்கரசர் இறைவன் மீது கொண்ட பேரன்பை மக்களின் ஊடாக வெளிப்படுத்தும் ஆற்றல் வியக்கத்தக்கமாகும். இறைவன் மீது யார் பக்தி உடையவனாக இருக்கின்றானோ, அவனே நாம் போற்றுதற்கு உரியவன் என்கின்றார். இங்கு அவன் நேரடியாக இறைவனைப் போற்றுவதற்குப் பதிலாக அவன் மீது ஆறாத காதல் கொண்ட அன்பனை போற்றுவோமாயின் அவனே நாம் வணங்குவதற்கு உரித்தானவன் என்பதை மிக ஆணித்தரமாக வலியுறுத்துகின்றார்.

எனவே இங்கு அன்பன் என்பதன் அர்த்தம் முக்கியமானது. அன்பன் என்போன் பேரும், புகழுமுடைய செல்வன் அல்லன். அவனை வணங்குதல் பாவச் செயலாகும். ஏனெனில் ஒருவனின் செல்வத்தால் அன்புக்குரிய அடிப்படையைப் பெற்றுக்கொள்ள முடியாது. இதனாலேயே ஹீஹீசங்கநிதி பதுமநிதி,, இவற்றை தந்தாலும் அவை எனக்கு ஒரு பொருட்டல்ல என்கின்றார் நாவுக்கரசர். எனவே அன்பருக்கு அன்பர் என்பவர் யார்? என்பதற்கான விடையை சைவர்களாகிய நாம் தெரிந்துகொள்ள வேண்டியது கட்டாயமாகும்.

சைவன் என்பவன், மக்களை நேசிப்பவன், மக்களின் பால் கருணை கொண்டவன் சாதிக்கு அப்பாற்பட்டவன். எல்லா உயிர்களையும் சிவனாக மதிப்பவன். அத்தகைய உன்னத சமயத்தில் அங்கத்தவன் என்ற வகையில் பெருமைப்படுபவனாக இருப்பவன். இத்தகைய சிந்தனைகளே எம்முன்னோர்கள் நமக்கு போதித்தவை அவற்றை விடுத்து, நம்மை பல கூறுகளாகப் பிரித்து நோக்குவதால், எம் பலத்தை நாமே நலிவாக்கிக் கொள்கின்றோம்.

நமது நடைமுறை வாழ்க்கைக்கும், நமது பலத்தை மேம்படுத்தக் கூடியதுமான வளமார்ந்த சிந்தனைகளை நம்முன்னோர் தமிழ் பாக்கள் மூலம் நமக்குத் தந்துள்ளனர்.


*With Best Compliments From:*

**Onida Steels**

41, Quarry Road,
Colombo 12
Tel: 445065, 338889. Fax: 459991.

அதனைப் படித்தலும் அதன் வழி ஒழுகலுமே எதிர்கால மேம்பாட்டக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வகை செய்வதாக இருக்கும்.
இதனாலேயே நாவுக்கரசர்,

'ஆவுரித் தின்றுழலும் புலையரேனும்....
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.....

என வலியுத்திக் காட்டுகின்றார். இந்த அடிகள் உண்மையில் எதை எடுத்துக் காட்டுகின்றன? இந்த அடிகளின் அடிபபடையில் சைவர்களாகிய நாம் செயற்பட்டோமாயின் எம்மிலிருந்து யாரும் விலகிச் செல்ல மாட்டார்கள். எம்முடன் பலர் வந்து சேர்வார்கள். நடைமுறையில் எம்மில் பலர் எம்மைவிட்டுச் செல்கின்றார்கள். இதற்கு விடைகாண்பதே எமது பலமாகும்.

சைவர்களாகிய நாம் சைவத்தின் அடிப்படையிலான மனித நேயத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். மனித விழுமியத்தை பேச்சளவில் காட்டாது நடைமுறை வாழ்க்கையில் காட்ட வேண்டும். நாம் சைவ உணவு உட்கொள்கின்றோம் என்பதால் சைவர்களாக முடியாது. சைவம் போதிக்கும், அன்பும் மனிதநேயமும் வாழ்வில் பிரதிபலிக்க வேண்டும்.

கங்கைவார் சடைக்கரத்தார்

சைவத்தின் நாயகன் சிவன் ஆவான். எல்லாம் வல்லவன் எல்லோர் மீதும் அன்பு செலுத்துபவன். வேண்டுவார் வேண்டுவதை கொடுப்பவன். இந்தவகையில் ''நண்ணார்க்கு நல்லவன'' என்றவாறு குறிப்பிடப்படுகின்றார். ஓர் உருவம், ஒரு நாமம் இல்லாதவர் நம் கடவுள். அவனை வழிபடும் வகையில் ஆயிரம் திருநாமம் சொல்லி நம்மவர்கள் வழிபடுகின்றனர். இந்த வகையில் இறைவனின் வடிவைப் பலவாறு சித்தரிக்கின்றனர்.

''குனித்த புவருவமும்
கொவ்வைச் செவ்வாயும்
குமிழ்ஞ் சிரிப்பும்
பனித்த சடையும் .....

''மாப்பிணைத் தழுவிய மாதோர் பாகத்தன் ....................

''வரியமறையார் பிறையார் மலையோர் சிலையா
வணங்கி..........................,

என்பன போன்ற பாக்களால் இறைவனின் வடிவத்தைத் தெளிவாகப் பல இடங்களில் வெளிப்படுத்தி உள்ளார்கள். எனவே இறைவன் வேண்டுவார். வேண்டுவதைக் கொடுப்பவன். சலன மில்லாதவன் மக்களின் நோய்களைத் தீர்ப்பவன். என்றெல்லாம் போற்றிப் புகழப்படுகின்றான். அத்தகைய கடவுளின் வழிவழித் தோன்றலாக நாம் இருக்கின்றோம் என்பதில் பெருமையும் மட்டற்ற மகிழ்ச்சியும் கொள்ளல் வேண்டும்.

நாம் யார்க்கும் குடியல்லோம்

சைவத்தின் உயர்சிந்தனை மக்கள் மத்தியில் முன்னெடுத்துச் செல்லப்படுதல் முன்

With Best Compliments From:
**Simkons Trading Co.**
10, Quarry Road, Colombo 12
Tel: 434307 , Fax: 334022

தேவையாகக் கொள்ளப்படுகின்றது. இறைவனே எமக்கெல்லாம் பெரியவன். அவன் சார்பிலெழுந்த சைவ அறச் சிந்தனைகள் நம்மக்களின் மத்தியில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

கங்கைவார் சடை கரந்தார்க்கு.....

நாம் அன்புள்ளவர்களாக இருப்பதால் நமது சிந்தனை, செயலாகவும் உயர்வானதாகவும் திகழும். அவ்வாறான சிந்தனை அவருக்கு அல்லாத வேறு எவருக்கும் அடிமை இல்லை என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக விளங்கும். இதுவே சைவத்கு தமிழர் மத்தியில் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய உயர் சிந்தனையாக மட்டுமின்றி மக்கள் மத்தியில் இன்று பெரிதாகச் சொல்லப்படும் மனித விழுமியங்களில் ஒன்றாக இருத்தல் அவசியமாகும்.

சாதியும் சைவமும்

சைவம் தனக்கெ உரித்தான சமூகவியல் சிந்தனைகளைக் கொண்டது. வாழ்வியல், சமூகவியல் அடிப்படைகளின் சமகாலச் சிந்தனைகள் வெளிக் கொணரப்படுதல் காலத்தின் தேவையாகும். குறிப்பாக இன்று சைவர்கள் பால் தொடுக்கப்படும் இன்னோர் கண்டனம் சாதி தொடர்பானதாகும். தமிழர் பாரம்பரியத்தில் சாதி தொடர்பான உயர்வு தாழ்வு இருக்கவில்லை. சாதியென்பது தொழிலின் அடிப்படையில் தோற்றம் பெற்றது என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தொன்றாகும்.

கங்கைவார் சடைகரந்தார்க்கு அன்பர் என்பவர், சாதி நிலையில் எவற்றையும் நோக்குதல் பாவச் செயலாகும். எத்தொழில் செய்பவராக இருந்தாலும் அவர் கங்கைவார் சடை கரந்தார்க்கு அன்பராகில் அவரை நாம் வணங்குதல், நம் பெருமானை வணங்குதலுக்குச் சமமானதாகும்.

எனவே சைவம் போற்றும், இந்த இறைச் சமத்துவத்தை சைவத்தைப் போற்றும் தமிழர்களாகிய நாம் கடைப்பிடித்தல், நம்மவர்கள் நம்மிலிருந்து வெளியேறுவதைத் தடுப்பதற்கும் நம்மை நாம் பலமுள்ளவர்களாக ஆக்கிக் கொள்வதற்கும் எமக்குள்ளே அன்னியோன்யத் தொடர்புகளை சமயத்தின் சார்ப்பில் மேம்படுத்துவதற்கும் பெருந்துணை புரியும்.

“அன்புமம் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே„

With Best Compliments From:
Nippon Metal Traders
365, Old Moor Street,
Colombo 12
Tel: 434752, 326063

# மெய்ப்பற்று

பேராசிரியர் டாக்டர் ப.இராமன்
(எம்.ஏ.பி.எச்.டி)
(சித்தாந்தச்செல்வர், அருநூற் புலமை
ஆன்றோர்) சென்னை -600 004

சொல் உயர்ந்த மறை சொல் முடிவுஆம் ஓர்
சொல் இயம்பு துரையா வரும் முருகா
இல் இடப் புரிவைவிட நினைவேன் கோள்
வெல்லும் உன் புரிவை விட நினையேனே

விளக்கம்

புரிவு - புரிவுசெய்திடல், விரும்பல், வேறுபட்டிடல், அன்பும், பேர் (மகர எதுகை). சொல் - புகழ். ''சொல் என்ப புகழ் நெல்கள்ளே சொல்லுடன் எழுச்சிமல்கல், (லகர எதுகை 493) எனக் கூறுவதால் சொல் புகழ் எனப் பொருள்படும். வேதம் ஆப்தர் வாக்கியம் என்றும், அந்தணர் வாக்கு என்றும், முதல் நூல் என்றும் சிறப்பித்துக் கூறப்படுவதால் அதன் பெருமை விளங்கும்''. அது இறைவன் வாக்காக இருந்தால் அதனினும் புகழுடைய நூல் வேறொன்றும் இல்லை. இந்த வேதத்தின் முடிவான் சொல் பிரணவம். இதன் பொருளைத் தம் தந்தையாகிய சிவனாருக்கு முருகவேள் விளக்கியுரைத்தவர். அதனால் சாமிநாதன் என்ற தனிப்பெயரும் பெற்றார். உலகத்திற்கே குருவான சிவனாருக்குக் குருவானதால் முருகவேள் பரமகுருவாக விளங்குகின்றார். இவரை வழிபடுவோரை நாளும் கோளும் துன்பம் செய்யமாட்டா. ஆதலால் முருகவேளின் அடியார்கள் நவக்கிரக வழிபாடு எனத் தனி வழிபாடு செய்ய வேண்டிய அவசியமில்லை.

நவக்கிரகங்களால் வரும் தீமைகளைப் போக்கும் முருகவேளைப் ப்றும் நான் என் வீட்டின் மீதும் சொந்த ஊரின் மீதும் கொண்டுள்ள பற்றைச் செவ்வேட்பரமன் பொருட்டு விட வேண்டுமென்றால் உடனே விட்டு விடுவேனேயன்றி அப்பெருமான் மீது வைத்துள்ள பற்றை ஒரு நாளும் விடமாட்டேன் எனக் கூறுவதால் பற்றற்றான் பற்றினைப் பற்றுவதற்குப் புறப்பற்றுகளான வீட்டையும் ஊரையும் துறத்தற்குச் சுவாமிகள் உறுதி பூண்டுள்ளது விளங்குகின்றது. தாம் கூறியுள்ளது போல் சுவாமிகள் தாம் வாழ்ந்த இல்லத்தையும் பாம்பன் தீவாகிய தம் ஊரையும் துறந்து செவ்வேட்பரமன் திருவடியே பற்றாகப் பற்றிக் கொண்டு ஒரு படகில் ஏறிப் பாம்பன் ஆற்றைக் கடந்து பின்பு மதுரை சேர்ந்து இரயிலில் சென்னைக்குப் பயணமானார்கள். !!இனி முருகா! உன் திருவடியைச் சேர்வதன்றி என் ஊருக்கு திரும்ப மாட்டேன்,, என்று கூறியுள்ளார்கள். கூறியவாறே தாம் வாழ்ந்த காலத்தில் பாம்பன் தீவிற்குச் செல்லவே இல்லை. வீடும் ஊரும் ஒருவருக்கு எளிதில் விடமுடியாத பற்றுகள். எவ்வளவு பதவியிலிருந்தாலும் எந்த நகரத்திலோ நாட்டிலோ வாழ்ந்தாலும் தாம் பிறந்த ஊரின் மீது பற்றில்லாதவர்கள் இல்லை. பிறந்த வீட்டையும் வாழ்ந்த ஊரையும் விடுவது அவ்வளவு எளிதன்று. அதற்குக் கடுமையான வைராக்கியம் வேண்டும். அந்த வைராக்கியம் நூற்றுக்கு நூறு உடையவர்தான் சுவாமிகள்.

''அகம் மாடை மடந்தையர் என்றயரும்
சக மாயையில் நின்று தயங்குவதே" (கந்தரநுபூதி 5)

என்றவாறு அகம் - வீடு, மாடை - பொன், மடந்தையர் - பெண்கள் என்று கூறப்படும் உலகமாயையில் நின்று எல்லோரும் சோர்வுற்று ஈடுகின்றார்கள். இவற்றைவிட முடிவதில்லை. சுவாமிகள் போன்ற எத்தனையோ கோடிகளில் ஒருவரால்தான் விட முடிகிறது. அப்படிவிட்டால் செவ்வேட்பரமன் அருள் அங்கையம்கனி எனக் கிட்டுமல்லவா.

*With Best Compliments From:*

**Well Wisher**

சரணம் நம்பினவர் சததமும் உய்ய
அருளும் அன்புடைய அயிலவ யாணர்
இரதம் ஊர் புரிவை விட நினைவேன் உன்
விரவும் உன் புரிவை விட நினையேனே

பொருள்

சரணம் - திருவடி, நம்பினவர் - நம்பின அடியார்கள் சத்தமும் - எப்போதும், உய்ய- பிழைக்க, அருளும் - அருள் புரியும் , அயிலவ- வெற்படையோனே, யாணர் - அழகிய இரதம் - தேர் ஊர் - செல்லும் புரிவை - பற்றை விட - விடுவதற்கு, நினைவேன் - நினைப்பேன் ,உள் - மனிதில் விரவும் - இருக்கும் ,உன் புரிவை - உன் மீது கொண்ட பற்றை விட - விடுவதற்கு நினையேனே - ஒருபோதும் நினைக்க மாட்டேன்.

கருத்து

உன் திருவடியை நம்பின அடியார்களுக்கு எப்போதும் அழைக்குமாறு அருள்புரியும் வேலிறைவனே! அழகிய தேரினில் செல்லும் பற்றினைவிட நினைவேனே அல்லாமல் என் மனதில் உன்மீது நிலைபெற்றிருக்கும் பற்றை விடுவதற்கு நினைக்க மாட்டேன்.

விளக்கம்

செவ்வேட்பரமன் திருவடியை நம்பின அடியார்கள் பிழைக்குமாறு எப்போதும் அருள்புரிபவன் வேலிறைவன். அதற்கு அநேக சான்றுகள் உள்ளன. சுவாமிகள் தமது சுப்பிரமணிய வியாசத்திலும் கந்த கோட்டமும் மணிக் கோவையிலும் ஆறுமுகன் அருளுக்குப் பாத்திரமாகி உய்வு பெற்ற அடியார்களின் விவரங்களை விரிவாகக் கூறியுள்ளார்கள்.

அந்தணத் துறவியாகிய பிரமேந்திரருக்கு தைதல்லியமற்ற அக வல்லிய பதவியை வழங்கியருளினாய். திரேதாயுகத்தில் வாழ்ந்த சத்தியநாதன் என்னும் அரசனுக்குச் சிவயோக நிலை கூடும்படி அருளினாய். சொன்ன குத்தன் என்னும் வணிகனுக்கும் அவன் மனைவி மகேசைக்கும் புதல்வனாகத் தோன்றித் துயர்களைந்து வரம் பல வழங்கியருளினாய். வசுமந்தன் என்னும் வேளாளனுக்கு முத்தியளித்தருளினாய். இடும்பனை மடித்து உயிர் எழுப்பி உன் அடிமைத்தொண்டு செய்து வர வரமளித்தருளினாய்.

. சேரமன்னனுக்குக் காட்சியளித்து அவன் விரும்பிய சிவகைலாச பதவியும் தந்தருளினாய். திருப்பரங்குன்றத்தில் நம் கணவனால் கைவெட்டுண்ட முருகம்மைக்குக் கை வளரும்படி செய்து வீடுபேறும் அளித்தருளினாய். சுகமுனிவருக்கும் ஐராவதன் என்னும் யானைக்கும் அவர் வேண்டிய வரமளித்தருளினாய். நந்திக் கடவுளுக்கு அவர் வேண்டிய சிவஞானத்தை விளக்கியருளினாய். வாசுகி என்னும் அரவரசனுக்குற்ற (பாம்புகளின் தலைமைப் பாம்பு) உடல் துன்பத்தைப் போக்கியருளினாய். டகீய சவ்விய முனிவரின் மாணாக்கன் செய்த ஐம்பெரும் பாதகங்களினால் உண்டான பாவங்கைளக் களைந்து உய்வித்தருளினாய். அன்புடன் கதிர்காம வேலா!, என்று கூவிக் காப்பாற்ற அழைத்தவனை அவனைக் கொல்ல வந்த காட்டு யானையைக் கொன்று அவனைக் காத்தருளினாய். கதிர்காமத்தில் யானை வடிவில் இருந்து வந்த கந்தருவன் உன்னைத் தொழுது வந்தமையால் அவன் சாபத்தை நீக்கியருளினாய். காசிப

*With Best Compliments From:*

**VATHSALA TRADE CENTRE**
182, Sea Street, Colombo 11
Tel: 471421

முனிவர் செய்த யாகத்தை அழிக்க வந்த மலயன். மாரன் என்னும் இருவரையும் கொன்று யாகத்தைக் காத்தருளினாய். வாசவனின் குதிரைக்குற்ற கவலையை நீக்கினாய். சந்தப்பா பதினாறாயிரம் பாடியருளிய அருணகிரிநாதருக்கு அருள் புரிந்தருளினாய். பிரமனைத் தலையில் குட்டிப் பெரும்புவியைப் படைக்கத் தொடங்கியருளினாய். சிவபெருமானுக்குப் பிரணவ உபதேசம் செய்தருளினாய். முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு ஓர் இலட்சத்து ஒன்பது வீரர்களையும் துணையாக இருக்கும்படியருளினாய். பழமையான பொதியமலையில் எழுந்தருளியுள்ள அகத்திய முனிவருக்கு அருள் புரிந்தருளினாய். தெய்வச் சோழருக்கு அருள்புரிந்தருளினாய். நாரத முனிவர், வாமதேவ முனிவர், தசரத இராமன். நக்கீரர் ஆகியோருக்கும் இன்னும் எண்ணற்றவர்கட்கும் அருள் செய்தாய் எனச் சுவாமிகள் கூறியுள்ளமையால் ஆறுமுகன் தன் அடியார்களை எப்போதும் காத்தருளுவான் என்பது உறுதி என்பது விளங்கும்.

அருணகிரிநாதர் அவனருளால் கவிபாடும் ஆற்றல் பெற்றார். முதன் முதலாக சந்தப்பாவால் அவனைப் புகழ்ந்துபாடும் திறன்பெற்றார்.

``பூர்வ பச்சிய தக்ஷிண உத்திர திக்குள்
பக்தர்கள் அற்புதமென ஏதும்
சித்ர கவித்துவ சத்த மிகுத்த திருப்புகழைச் சிறிதடியேனும்
செப்பென வைத் துலகிற் பரவத் தெரிசித்த
அநுக்ரகம் மறவேனே'' (திருப்புகழ் : 384)

எனும் திருப்புகழால் அறியலாம். ``வாக்குக்கு அருணகிரி'' என உலகமெலாம் புகழுவது கவிபாடும் திறமருளியவர் கந்தக் கடவுள் என்பதால் ``நின் தகவினால் புகழ் சொன்னோன'' என்றார். அம்முனிவர் அறுமுகன் ஒருவனையே வழிபட்டு அவ்வொருவனையே புகழந்து பாடினார். ஒவ்வொரு திருப்புகழின் முடிவிலும் பெருமாளே என்னும் சொல்லால் முடிப்பார். பெருமாள் என்பது திருமாலைக் குறிக்காது. பெரிய ஆள் என்று பொருள் தரும். பெரிய ஆளாவது பெரியோன் என்பதாகும். பெரியோன் என்பது பரப்பிரமம் என்ற கருத்தில் கூறப்பட்டதாகும். அந்தப் பெருமான் என்ற சொல்லின் பொருள் ஐய என்ற சொல்லுக்கும் பொருந்தும். ஐய, ஐயன் - தலைவன், அதாவது எல்லோரினும் பெரியன் என்பதாகும்.

ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து ஆகும். ஞானேந்திரியங்கள் செவி, மெய், கண், நாக்கு, மூக்கு என்பனவாகும். இவ்வைந்தையும் இப்பதிகத்தில் சுவாமிகள் கூறியுள்ளார்கள். செவி நீங்கலாக ஏனைய கருவிகளை முன்பாடல்களின் உரையில் விளக்கியுள்ளேன். இப்பாடலினால் செவி பற்றியும் அந்தக் காரணங்கள் பற்றியும் அறிதல் நலம்.

'ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ,, எனப் பாரதியார் பாடுகின்றார். இந்த ஓசையைக் கேட்கும் கருவி நமது செவிதான் இசை இன்பத்தை மட்டுமல்லாமல் துன்பக் குரலைக் கேட்டு வருந்துவதும் செவிதான். நாம் ஒருவருக்கொருவர் உரையாடும் போது சொல்லும் பொருளை அறிவதற்கும் செவியே முக்கிய கருவியாக கேட்டல் நன்றே,, என்றவாறு அறிஞர். ஆசிரியர், பெரியோர் சொல்லும் பயன்தரும் கருத்துக்களைக் கேட்டு அறிவை வளர்க்க உதவும் கருவி செவிதான்.

``செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை,,

With Best Compliments From:

**GOKULE RAADHAI MERCHANTS**

184, Sea Street, Colombo 11

Tel: 421912

என்ற திருக்குறளின் படி செவியால் கேட்டுப் பெறும் அறிவு என்றும் எல்லாச் செல்வததிலும் தலையாயது என்று அறியலாம் இதனை இழக்க யார்தான் விரும்புவார்? காதிருந்தும செவிடராய் வாழ எவர்தான் விரும்புவார்? சுவாமிகளோ முருகன் மீது வைத்த பற்றால் செவிச் செல்வத்தையும் விட நினைக்கின்றார்.

ஞானேந்திரியங்களை இயக்குபவை அந்தக் காரணங்கள்தான். அவற்றையும் உறங்கச் செய்வேன் என்கின்றார். அந்தக் காரணங்களில் சித்தம் என்பது ஆன்மா ஒன்றைச் சிந்திப்பதற்குரிய கருவியாகும். நன்கு தெரிந்த தன்னற மீள மீளச் சிந்திப்பதினாலேயே இன்பமும் துன்பமும் உண்டாகின்றன. ஆதலால் ஆன்மாவின் தன் வேதனைக் காட்சிக்குச் சித்தமே கருவியாகும் என்க.

புத்தி எனும் கருவி ஆன்மா முன்பு பொது வகையாக உணர்ந்த பொருளை பெயர், சாதி, குணம், கன்மம், உடைமை என்பவற்றால் திட்டமாக உணர்வதற்கு உதவுகின்றது.

அகங்காரம் என்னும் கருவி ஆன்மா எழுச்சியுறச் செய்யும் ''யான் இதனைச் செய்வேன், ஆராய்வேன், சொல்வேன், செல்வேன்" எனச் செயற்பட உணர்வைத் தூண்டுவதாகும். இ்.து இல்லையேல் ஒருவரும் ஏந்தச் செயலையும் செய்யமாட்டார்.

மனம் என்னும் கருவி சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐம்புலன்களை ஆன்மா பற்றுதற்கும் புத்த தத்துவத்தால் நிச்சயித்த பொருளை நினைவில் வைத்துக் கொள்வதற்கும் உதவுதாகும். ஒரு பொருளின் பெயர், சாதி, குணம், கன்மம், உடைமை என்பவற்றால் பத்தியால் அறியப்பட்டதை அதேவகையில் அ்.து இன்னது தானோ? அல்லது வேறோ என்று சங்கற்ப விகற்பங்கள் கொண்டு ஐயம் கொள்ளும் இயல்புடையது. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புறக்கருவிகளும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் அகக் கருவிகளும் அடங்கிக் கிடப்பதே உறங்குவதாகும். இவை செயலற்றால் மனிதனுக்கு இன்பமும் இல்லை, துன்பமும் இல்லை. ஆகையால், பற்றில்லாமல் இருக்க முடியாது. இவை உறங்குவதையே நினைவேன். அறுமுகன் பற்றைவிட நினையேன் எனும் சுவாமிகள் உறுதிப்பாடு நம்மை வியக்க வைக்கின்றது. இதுவன்றோ மெய்ப்பற்று.

முடிவுரை

மெய்ப்பற்று எனும் இத்திருப்பதிகம் மிகச் சிறந்த பதிகம் என அடியேன் எண்ணுகிறேன். சுவாமிகள் பாடல்கள் எல்லாம் சிறந்தவைதான். ஒவ்வொரு வகையில் ஒவ்வொன்றும் சிறப்புடையதாக உள்ளது. இத்திருப்பதிகத்தில் நாம் கொண்டுள்ள பற்றுக்கள் அனைத்தையும் சுவாமிகள் கூறியுள்ளார். இப்பற்றுக்களை வைத்துக் கொண்டே இறைவன் மீது பற்று வைத்துள்ளதாக நாம் நடித்துக் கொண்டிருக்கிறோம். வீடு, ஊர், வாகனம், உறவினர், நண்பர், பிள்ளைகள், மனைவி, ஏவலாளர்கள் ஆகியோர் மீது கொண்ட பற்றை நம்மால் விடமுடிகின்றதா? மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய காரணங்களில் வைத்துள்ள பற்றையும் விடமுடிவதில்லை. இவை அனைத்திலும் உள்ள பற்றைவிடாமல் இறைவன் மீது பற்று வைத்துள்ளதாக எண்ணுகிறோம் அந்தப் பற்றும் இந்த உடம்பும் உயிருடன் நிலைத்திருக்கவும நன்றாக இருக்கவும் இன்பங்களைத் துய்க்கவும் அவன் கருணை காட்ட வேண்டும் என்னும் பயன் கருதித்தான் கொண்டுள்ளோம் என்றால் பற்று நம்மீதா? இறைவர் மீதா? எண்ணிப்பாருங்கள். சுவாமிகள் இந்தப் பற்றுக்களை எல்லாம் உன் பொருட்டாக விடுவேன் என்று உறுதியாகக் கூறுகின்றார்கள். கூறியவாறு விடவும் செய்தார்கள். சுவாமிகள் வாக்கும், வாழ்வும் நமக்குக் காட்டுகின்ற வழியில் சென்றால் நமக்கும் முருகவேள் அருள் புரிவான் என்பது உறுதி.

பெறுதற்கரிய இம்மானிடப்பிறவியைப் பெற்றவன் இப்பிறவியிலேயே ஈசுவரனை அறிய முயலாது போனால் வீணில் பிறந்தவனேயாவான்.

# மாணிக்கவாசகர் அருளிய திருச்சதகம் புலப்படுத்தும் பக்திநெறி

**திருமதி. அ. வைத்திலிங்கம்**
(எம்.ஏ.தமிழ், முதுகலை தமிழ்)

பண்டைத் தமிழர் இறைநெறியைப் போற்றினர். குறிஞ்சி முதலாகிய ஐவகை நிலங்களுக்குரிய தெய்வங்களை வகுத்தனர். இயற்கை நெறியை இறைநெறி எனவும் கருதினர். எனினும் சைவம், வைணவம் முதலான சமயப் பிரிவுகள் அக்கால எல்லையில் இருந்ததாக அறிய முடியவில்லை. ஆயினும், அச்சமயங்களுக்குரிய தெய்வங்களைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்பெறுகின்றன.

சைவத்தின் தனிப்பெருங் கடவுளான சிவனுக்கு இறையோன், கடவுள். பெரியோன், ஆலமர்செல்வன் என்ற பெயர்கள் வழங்கப் பெற்றன எனத் தெரிகின்றது. ''நீல மணிமிடற்று ஒருவன்'' என ஔவையார் சிவனது நிலைப்புத் தன்மையைப் புறநானூற்றில் பாடியுள்ளார். இவ்வாறே 'பிறவா யாக்கைப் பெரியோன், எனச் சிலம்பும், 'நுதல் வழி நாட்டத்து இறையோன' என மேகலையும் குறிக்கின்றன.

சிவம் என்னும் சொல்லை அடிப்படையாகக் கொண்டு சைவம் என்னும் பெயர் தோன்றிய பின்னர் சைவம் சமயப் பிரிவுகளுள் ஒன்றாயிற்று.

சிவபெருமானைப் பரம்பொருளாக ஏற்றுப் போற்றும் சமய நெறிச் சைவசமயம் என்று பெயர் பெறுகின்றது. ''சைவ சமயத்தனி நாயகன் நந்தி,, என்னும் திருமந்திரத் தொடர் இக்கருத்தை அரண் செய்கின்றது. சைவசமயத்திற்கு வேதங்களும் சிவாகமங்களும் அடிப்படைகளாக ஏற்கப் பெற்றுள்ளன. ஆதலால், அச்சமயம் வைதீகச் சமயம் என்றும் வழங்கப் பெறுகின்றது.

சிவபரம்பொருளை அறிதற்குரிய வழிவகை சாத்திர நெறி என்று பெயர் பெறுகின்றது. அவ்வாறே அப்பரம்பொருளை அடைதற்குரிய வழிமுறையைத் தோத்திர நெறி என்று வழங்குவர். சாத்திர நெறி என்பது தத்துவச் செறிவு ஆகும். தோத்திர நெறி அன்பின் பயனாக விளைந்த வழிபாட்டு நெறியாகும். சாத்திர நெறி அறிவு நெறி என்னும், தோத்திர நெறி அன்பு நெறி என்றும் வழங்கப் பெறுகின்றன.

தமிழகத்தில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுத் தொடங்கிப் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை தோத்திர நெறி, பக்தி நெறியாக வளர்ந்தது. சைவ சமய நாயன்மார்கள் அந்நெறியைத் தொடங்கி, அதற்கு வளம் சேர்த்தனர். அந்நெறி, பல்லவர் காலத்தில் பெரிதும் செழித்தது. பிற்காலச் சோழர் காலத்தில் முழுமை பெற்றது.

மேற்குறித்த காலங்களில் தோன்றிய சைவம் சார்ந்த பக்தி இலக்கியங்கள், திருமுறைகள் என்னும் பெயரில் வழங்கப் பெற்றன. இத்திருமுறைகள் திருஞானசம்பந்தர் முதலாக இருபத்தெழுவரால் இயற்றப் பெற்றன.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டாக முறைப்படுத்தப் பெற்றுள்ளன. திருஞானசம்பந்தர் பாடிய

முதலில் ஈசுவரனைத்தேடி , அப்பால் உலகப் பொருளைத்தேடு.
இதற்கு மாறாகச் செய்யாதே. ஆத்ம ஞானத்தை அடைந்தபிறகு நீ
உலக வாழ்க்கையிலே பிரவேசித்தால்
உனக்கு மனச்சஞ்சலமே இராது.

தேவாரங்கள் ஒன்று முதல் மூன்று திருமறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்கள் நான்கு முதல் ஆறாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. சுந்தரர் திருவாய் மலர்ந்தருளிய 100 பதிகங்களும் ஏழாம் திருமுறையாக இடம்பெற்றுள்ளன.

மாணிக்கவாசகரின் திருவாசகம், திருச்சிற்றம்பலக் கோவை என்னும் இரண்டினையும் எட்டாம் திருமுறையாக வகுத்தனர்.

திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பா, சேந்தனார் பாடியருளிய திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறையாக அணி செய்கின்றது.

திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறையாக அமைந்துள்ளது.

திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார் முதலிய பன்னிருவர் அருளிய நாற்பது பிரபந்தங்களும் பதினோராம் திருமுறையாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

இறுதியாக தெய்வச் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகத் திகழ்கின்றது.

''திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய தேவாரத் திருப்பதிகங்களை மட்டுமே நம்பியாண்டார் நம்பி ஏழு திருமுறைகளாகத் தேடித் தொகுத்தார் எனவும், எட்டுமுதல் பதினொன்று வரையுள்ள திருமுறைகள் நம்பியாண்டார்நம்பி காலத்திற்கு பின் தோன்றிய பெருமக்களால் அம்முறையே தொகுக்கப் பெற்றிருத்தல் வேண்டும் எனவும் கொள்ளுதலே வரலாற்று முறைக்குப் பெரிதும் பொருந்துவதாகும்'' என்று திரு. க. வெள்ளைவாரனனார் கருதுகின்றார்.

சிவபிரான் அருளிய திருவருள் இன்பத்துள் திளைத்து, அந்த ஆனந்த நிலையைப் பாக்களால் திருவாதவூரடிகள் அருளியுள்ளார். மணிபோன்ற பாக்களாதலின் மாணிக்கவாசகர் எனப் பெயரிடப் பெற்றார். முத்தியாகிய பேரின்பத்தை அடைவதற்குரிய பக்திநெறியின் இலக்கியமாக விளங்குவது திருவாசகம். சிவபெருமான் வழங்கிய பேரானந்தமாகிய திருவருளின்பத்தைத் தூய தாமரைமலர் போலும் தமது திருவாயிலிருந்து வெளிப்படும், அழகிய சொற்களால் திருவாசகப்பனுவலாக அருளினார் மாணிக்கவாசகர். பிறவித் துன்பத்தை வேரறுப்பது திருவாசகம். இதனைத் திருக்கடவூர் உய்யவந்த தேவநரயனார் தமது திருக்களிற்றுப்படியார் என்னும் நூலில் பின்வரமாறு பாடியுள்ளார்.

''பாய்பரியோன் தந்த பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலரால் சொற்செய்து - மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன்.''

திருவாசகத்தில் ஐந்தாம் பகுதியாகத் திருச்சதகம் அமைந்துள்ளது. தெய்வத்தன்மை வாய்ந்த நூறு திருப்பாடல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதால் திருச்சதகம் என்னும் பெயர் பெற்றது. சதம் என்ற வடசொல், நூறு என்னும் எண்ணினைக் குறித்த பெயராகும். அது, 'க' என்னும் ஓர் இடைச்சொல்லைப் பெற்றுச் சதகம் என ஆயிற்று.

எண்ணெய் இல்லாது போனால் விளக்கு எரியாது. அதுபோல்
ஈசுவரனில்லாமற்போனால் மனிதன் ஜீவித்திருக்க முடியாது

இத்திருச்சதகம்

1) மெய்யுணர்த்தல்
2) அறிவுறுத்தல்
3) சுட்டறுத்தல்
4) ஆத்துமசுத்தி
5) கைம்மாறு கொடுத்தல்
6) அனுபோகசுத்தி
7) காருணியத்திரங்கல்
8) ஆனந்தத் தழுந்தல்
9) ஆனந்த பரவசம்
10) ஆனந்தாதீதம்

எனப் பத்துத் தலைப்புகளை உடையதாய், ஒவ்வொரு தலைப்புக்கும் பத்துப் பத்துப் பாடல்களைக் கொண்டதாய்ப் பத்துயாப்பு விகற்பங்களைப் பெற்றுள்ளது.

இத்திருச்சதகத்திலுள்ள நூறு பாடல்களும் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன. 'மெய்தான் அரும்பி' எனத் தொடங்கும் இத்திருசதகத்தின் முதற்பாடலின் முதற்சொல்லோடு பொருந்தும் வகையில் இதன் நூறாம் பாடலாகிய இறுதிப் பாட்டு 'மெய்யர்மெய்யனே' என முடிந்து ஈறும் முதலும் ஒன்றாய் இணைந்து ஒரு மாலை போன்று காணப்பெறுகின்றது.

''திருச்சதகம் என்னும் இப்பகுதி ஒருவகைப் பாட்டாலன்றிப் பலவகைப் பாடல்களால் அமைந்திருத்தலின், பக்தியையும், வைராக்கியத்தையும், பலவகையில் வெளிப்படுத்தி அருளியது,, என்னும் பொருளியல் பக்திவைராக்கிய விசித்திரம் என இதற்குக் கருத்துத்துரைத்தார். பக்தி - இறைவன் பாட்டு எழுவதாகிய கனிந்த மனத்தின் நெகிழ்ச்சி. வைராக்கியம் - உலகப் பொருளிடத்திருந்த பற்று அறுதல். சூரியன் எழ இருள் விலகுதல் போலப் பக்தி தோன்ற உலகப் பொருள்களிடத்து வைத்த பற்று மறைந்து வைராக்கியம் மிகும். அதன் பயனாக வியக்கத்தக்க அனுபவங்கள் விளையும்.

இறைவன், திருப்பெருந்துறையிலே குருந்தமர நிழலில் அருட்குரவனாக எழுந்தருளித் திருவாதவூரருக்கு ஞானோபதேசம் செய்தான். அங்ஙனம் உபதேசிக்கப் பெற்ற அவர், குருமூர்த்தியாக வீற்றிருந்த இறைவன்பால் கொண்டுள்ள எல்லையற்ற பேரன்பினைப் புலப்படுத்தும் வகையில் இத்திருச்சதகம் அமைந்துள்ளது. தம்மை ஆட்கொண்டருளிய பேரருளாளனாகிய இறைவனிடத்து வாதவூரடிகள் காட்டிய பேரன்பின் முதிர்ச்சியையும் அதன் பயனாக "யான", "எனது" என்னும் இருவகைப் பற்றுக்களும் அறவே நீங்க, அவர்பால் நிகழ்ந்த வியக்கத்தக்க நற்செயல்களைப் புலப்படுத்தும் முறையில் இத்திருச்சதகம் அமைந்துள்ளது.

திருவாசகர் ஒரு ஞானப்பனுவல். அதை இறைவனே மானுட வடிவம் தாங்கி, ஏடும் எழுத்தாணியும் கொண்டு, தம் கைப்பட எழுதிக் கொண்டான் என மாணிக்கவாசகர் வரலாற்றால் அறியலாம். மானுடராகப் பிறந்த மாணிக்கவாசகரின் அன்பு தேவாதி தேவனாகிய இறைவனை அவ்வாறு எழுதத் தூண்டியது என்பதே உட்பொருளாதாகும்.

இறைவனை அடைதற்குரிய நெறிகளுள் அன்பு நெறியே தலையாய நெறியாகும். பக்தி நெறி என்னும் இந்நெறி வழங்கப் பெறும், திருவாசகம் முழுமையுமே பக்தி நெறியை விளக்குவதுதான். அதன் ஒரு பிரிவாகிய திருச்சதகமும் இந்நெறியைப்

பந்தப்பட்ட ஆத்மா மனுஸ்யனாகும். மாயையாகிய சங்கிலியாற்
கட்டுப்படாத ஆத்மா ஈசுவரனாகும்.

போற்றுகின்றது. எனினும், திருச்சதகங்துள் பக்திநெறி நூறு பாடல்களால் விளக்கப் பெறுகின்றது. இது திருச்சதகம் என்னும் வடிவத்திற்குரிய தனிச்சிறப்பாகும்.

பக்தியாவது, இறைவன் உயிர்கள் பால் வைத்த பெருங்கருணைத் திறத்தின் எளிமையை எண்ணிய அளவில், மெய்யடியார்கள் உள்ளகத்தே தோன்றிப் பெருகும் பேரன்பாகும். உயிர்களின் சிறுமை நோக்கி அவற்றை ஒதுக்காமல், உரிய காலத்தே இறைவன் வெளிப்பட்டு, அவை உய்யும் வகையில் அருள் செய்வான். அவன் அருளிய விதத்தை வியந்து போற்றுதல் பக்தியின் வெளிப்பாடாகும்.

அவ்வகையில் இறைவன் திருப்பெருந்துறையிலே குருந்த மரநிழலில் அருட்குரவனாக எழுந்தருளித் திருவாதவூரருக்கு ஞானநெறி வழங்கினான். அவ்வாறு தமக்கு ஞானோபதேகம் அளித்த இறைவன்பால் மாணிக்கவாசகர் கொண்டுள்ள எல்லையற்ற பேரன்பினைப் புலப்படுத்தும் நிலையில் அமைந்தது திருச்சதகமாகும். ஆதலால், இப்பகுதிக்குப் பக்தி வைராக்கிய விசித்திரம் என ஆன்றோர் கருத்துரை வழங்கினர்.

உயிர்க்குத் துணையாக விளங்குபவன் இறைவன். ஆருயிர்த் தலைவனாகிய அச்சிவனை நினைந்த அளவில் உண்டாகும் அன்புப் பெருக்கினால் உள்ளத்தின் கண் இன்பவுணர்வு தோன்றும். அவ்வுணர்வின் வழி மெய்யின் கண் மயிர்சிலிர்த்தல், நடுக்கம் எய்தல், நெஞ்சம் நெகிழ்தல், கண்ணீர் அரும்புதல் முதலான மெய்ப்பாடுகள் தோன்றும்.

மாணிக்கவாசகருக்குத் தோன்றிய இவ்வகைப் பக்தி மெய்ப்பாட்டைத் திருச்சகத்தின் முதற்படலில் காணலாம்.

''மெய்தான் அரும்பி விதிர்வித்து
உன்விரையார் கழற்றுஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
துழம்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே"

மெய்யடியார்களிடத்து நிகழும் அன்புரிமைச் செயல்கள் தம்மிடத்தும் நிகழ்ந்தனவாக மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார். மனம், மொழி, மெய் என்னும் மூவகை நிலையிலும் தமது பக்தியைப் புலப்படுத்துமாறு இப்பாடலைப் பாடியுள்ளார். மெய்யரும்புதல், கை தலை வைத்தல், கண்ணீர் ததும்புதல், வெதும்புதல் என்பன மெய்யின் தொழில்கள். பொய் தவிர்த்தல் என்பது மனத்தின் தொழில்! போற்றி! சய சய போற்றி! என்றல் உடலின் தொழில், மனத்தால் பொய் தவிர்த்து, வாக்கால் போற்றி, உடம்பால் வணங்கல் என்பதே முறை. ஆயினும், செய்யுள்நோக்கி முறைமாறி அமைந்துள்ளது. கண் கொள் - எனது நிலையை நோக்கி அருள் செய்யத் திருவுள்ளங்கொள்! என இறைவனிடம் வேண்டுகின்றார்.

''இத்திருச்சதகத்தின் முதல் திருப்பாட்டால் அடிகள் தம் இயல்பு கூறினாராயினும், அடிகளின் அன்பு வடிவத்தை நம்மனோர் நெஞ்சக்கிழியின் ஓவியமாகப் பொறித்து நினைவு கூர்வதற்கு இத்திருப்பாட்டு மிகவும் பொருந்தியது என்பது அறிந்து இன்புறத்தக்கது. வடமொழியார் இத்தகைய திருப்பாட்டுக்களைத் தியான சுலோகம் என்ப" பண்டிதமணி மு. கதிரேசனாரின் இவ்விளக்கம் மாணிக்கவாசகரின் திருவுருவம் பக்தியால் அமைந்தது என்பதை அறியத் துணை செய்கின்றது.

ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களில் எது மேலோங்கி நிற்கிறதோ அதற்கேற்ப மனிதர்கள் வேறுபட்ட சுபாவமுள்ளவர்களாக இருக்கின்றனர்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும் அவற்றுக்கான ஐம்பலன்களும் மனிதன் அறிவைப் பெறத்துணை செய்கின்றன. எனினும், மனிதன் அவற்றின் போக்கிலேயே தன்னைச் செலுத்துவானாயின் அவன் இறைவன் திருவருளைப் பெறவியலாது. ஆதலால், ஐம்பொறிகள் குறித்து விழிப்புணர்வு தேவை என்பதைச் சமயத் தத்துவங்கள் வலியுறுத்துகின்றன. திருநாவுக்கரசர்,

புள்ளுவர் ஐவர்கள்வர் புனத்திடைப்
புகுந்து நின்று
துள்ளுவர் சூறைகொள்வர் தூ நெறி
விளைய வொட்டார்
முள்ளுடை யவர்கள் தம்மை
முக்கணான் பாதநீழல்
உள்ளிடை மறைந்துநின்று அங்கு
உணர்வுனால் எய்யலாமே

என்னும் பாடலில் ஒரு கருத்தை வலியுறுத்தியுள்ளார். ஐம்பொறிகளைக் கள்வர்கள் ஐவராக உருவகப்படுத்தி, அவர்களை இறையுணர்வினால் வெற்றிக் கொள்ளலாம் என்கின்றார் அப்பரடிகள்.

மாணிக்கவாசகருடைய மனம் முதலிய அகக்கரணங்களையும் கண் முதலிய புறக்கரணங்களையும் வாய், கை முதலிய தொழிற்காரணங்களையும் தமக்குப் பயன்படுமாறு இறைவன் தம்மை ஆட்கொண்டான் என்னும் கருத்தைப் பின்வரும் பாடலில் பாடியுள்ளார்.

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணினைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி....

இங்கு, மாணிக்க வாசகரின் கண்கள் உலகப் பொருள்களைப் பார்ப்பதற்கு மாறாக இறைவனுடைய திருவடித் தாமரைகளை நோக்குமாறும், வணக்கத்தையும் அத்திருவடிக்கே ஆகுமாறும் இறைவன் பணிகொண்டான். இவ்வாறே, சிந்தனையும் மொழியையும் மடைமாற்றினான் எனப் பாடல் வழி அறியப் பெறுகின்றது.

இவ்வாறு ஐம்பொறிகளையும் ஐம்புலன்களையும் அகக் கருவிகளையும் உலகப் பொருள் களினின்று விலக்கி இறைநெறியில் பயன்படுமாறு செய்தால் திருவருளின்பம் பெறலாம் என்னும் கருத்தைத் திருச்சதகம் உணர்த்துகின்றது. இறைவன், ஐம்பொறிகள் முதலியவற்றைத் தம்நெறியின் கண் செலுத்தினான். ஆதலால் நான் திருவருள் பெற்றுய்ந்தேன். அத்திருவருளும் அவன் அருளாலே தமக்குக் கிடைத்தது என்றும் தன்செயல் அன்று எனவும் தமது பக்திவயப்பட்ட நிலையை மாணிக்கவாசகர் உணர்த்துகின்றார்.

நான் தனிப்பட்ட ஜீவன் எனக்கூறுவது , கங்கைப் பிராவகத்திற்குள்
ஒரு சிறு பாகத்தை அணையிட்டுக் காட்டி
அவ்வணைக்குள்ளிருக்கும் நீரை என்னுடைய கங்கை என்று
கூறுவதற்கொப்பாகும்.

பணியாற்றியுள்ளனர். ஆதீனம் 18 மொழிகளில் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட நூல்களைக் கொண்ட நூலகமொன்றைப் பராமரித்து வருகிறது. தமிழகத்து நல்லறிஞர்கள் பலருக்கும் ஆதீனம் பட்டங்கள் வழங்கி அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு ஊக்கமூட்டி வருகிறது. பலர் ஆதீனப் புலவராக விளங்கித் தமிழ் வளர்த்து வருகின்றனர். தேவாரம் பயிற்றுவிக்க ஒரு பாடசாலையும் இங்கே நடைபெற்று வருகின்றது. தமிழ்த்திருமுறை வாணர்களுக்கு ஆண்டு தோறும் சீர்காழி மற்றும் திருவாரூரில் பட்டமளித்துப் பணமுடிப்பும் வழங்கப் படுகின்றது. சென்னையில் சமயப் பிரகார நிலையம் நிறுவித்தமிழும் சைவமும் தழைத்து இனிதோங்க நற்பணிகள் பலவற்றையும் இவ்வாதீனம் ஆற்றி வருகின்றது.

ஆதீனம் சமய-சாஸ்திரத் தமிழ் மாநாடுகளை அவ்வப்போது நிகழ்த்தி வருகின்றது. ஆதீனத் திருக்கோயில்களில் திருமுறைப் பெருவிழாக்களும், சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்படுகின்றன. ஆதீனப் பல்கலைக் கல்லூரியுடன் சைவசித்தாந்தக் கல்லூரியொன்றும் நடைபெற்று வருகின்றது. தமிழ் இசைவாணர்களும் கலைஞர்களும் ஆதரிக்கப்படுகின்றனர். ஸ்ரீ குரு ஞன சம்பந்தர் பணிமன்றம் என்ற அமைப்பும் அண்மையில் தொடங்கப் பெற்ற சைவ-சித்தாந்த மேல்நிலையாராய்ச்சி மையமும், சமூக-சமயப் பணிகளாற்றி வருகின்றன.

தமிழ்ப் பரிசுகள் பலவற்றை வழங்கி ஊக்கமூட்டி வரும் தருமையாதீனத்தைத் தற்போது புரந்துவரும் 26வது குருமூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சிறந்த தமிழறிஞராகத் திகழ்பவர்கள். இவர்கள் ஆட்சிக்காலத்தில் ஆதீனம் தமிழ் வளர்ச்சியில் அரும் பணிகள் பல ஆற்றி வருவது குறிக்கத்தக்கது.

## திருப்பானந்தாள் மடம்:-

இம்மடம், கி.பி 1726 இல் ஸ்ரீ காசிவாசி தில்லைநாத சுவாமிகளால் நிறுவப்பட்டது. இவரும் இவருக்கு முன்னிருந்த ஐந்து பெரியவர்களும், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் காசி மாநகரில் நிறுவிய குமாரசாமி மடத்தில் இருந்தவர்கள். அம்மடம் இப்போது ''காசி மடம'' என அன்போடு வழங்கப்படுகின்றது. அம்மடத்தின் தொடர்பாக ஆடுதுறை இரயிலடியிலிருந்து ஏழு கால் தொலைவில் உள்ள திருப்பனந்தாளில் ஒரு மடம் நிறுவப்பட்டதால் இம் மடத்திற்குத் திருப்பனந்தாள் ''காசி மடம்'' என்னும் பெயர் ஏற்பட்டது. குமரகுருபரை அவர் காலத்து ஆதரித்தவர், அப்போதைய தருமபுர மடத்தின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர். எனவே இதனைத் தருமபுரத்தின் சிஷ்யமடம், என்றும் வழங்குவர். இன்னும் தருமையாதீன கர்த்தரே இம்மடத்திற்குத் தலைவரை நியமித்து வருகிறார்.

இப்போது இம்மடத்தினைத் தலைமைதாங்கிச் சிறப்புற நடாத்தி வரும் சைவப் பெரியார், ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் என்பவர். இவர் சைவமும் தமிழும் தழைத்தோங்க அளப்பரிய தொண்டு செய்துள்ளார்கள். திருப்பனந்தாளில் தமிழ்ப் புலவர் கல்லூரி ஒன்றையும் ஸ்ரீ வைகுண்டத்தில் ஒரு கலைக் கல்லூரியினையும், ஓர் உயர் பள்ளியினையும் நிறுவியுள்ளனர். தேவாரப் பாடசாலைகளும் மருத்துவ மனைகளும் ஏற்படுத்துயுள்ளனர். திருக்கோவில்களில் தேவாரத்திருப்பதிகப் பாடல்களைச் சலவைக் கற்களில் பொறித்து வைத்துள்ளனர். ''சிவசிவ'' என்ற மின்விளக்குகளையும் சிற்சில கோயில்களில் பொறித்துள்ளனர். இம் மடத்தின் தலைவராய் முன்னர் இருந்து மறைந்த ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாதர் சுவாமிகள் சென்னைப் பல்கலைக் கழகத்து வித்துவான் தேர்வில் முதன்மை பெறுபவர் ஆயிரம் ரூபாய் பரிசு பெறும் வண்ணம் நிலையான ஏற்பாட்டைச் செய்துள்ளார்கள். மேலும் குமரகுருபர

ஜீவாத்மாவானது பிரம்மமாகிய சமுத்திரத்தில்
முழ்கும்போது தன்னுடைய எல்லையுட்பட்ட
தனித்தன்மையை இழக்கின்றன.

சிவஞான முனிவர் பாண்டிநாட்டு விக்கிரம சிங்க புரத்திலே ஆனந்தக் கூத்தர்க்கும் மயிலம்மைக்கும் மகவாய்த் தோன்றி எண்ணற்ற நூல்களைத் தந்தார். யமகம், திரிபு என்னும் சொல்லணிகளை விளக்கும் முல்லைவாயிலந்தாதி, திருக்குறட் செய்யுளுக்கு உதாரணச் செய்திகளைக் கூறும் சோமேசம் முதுமொழி வெண்பா, கற்பனை வளம் மிகுந்த அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் உருக்கமான பாடல்களைக் கொண்ட கல சையந்தாதி, காஞ்சிப் புராணம் முதலியன இவர் இயற்றிய நூல்களாகும். இவர் நன்னூலுக்கும் உரை கண்டுள்ளார். இவரது ``தொல்காப்பிய சூத்திர விருத்தி'' சிறந்த ஆய்வு நூலாகும். ``திராவிட மாபாடியம்'' என்னும் சிவஞான போதத்திற்கு எழுதிய உரை இவருடைய பெயரை என்றும் இவ்வுலகில் வாழவைப்பதாகும்.

## தருமபுரமடம்:

தமிழகத்தில் மூவேந்தர் ஆட்சி நிறைவுற்ற பிறகு தமிழ் வளர்க்கும் பொறுப்பில் சைவ ஆதீனங்கள் பெரும் பங்கு வகித்தன. சித்தாந்த சேவை வளர்க்கும் நோக்கில் கிளைத்த இவ் வாதீனங்கள் தமிழுக்கு ஆற்றியிருக்கும், ஆற்றிவரும் பணிகள் குறிக்கத்தக்கன. தமிழகத்துச் சைவ ஆதீனங்களிற் திருக்கையிலாயத் திருமரபில் மெய்கண்ட சந்தானத்தில் விளங்கி வருவது தருமபுர ஆதீனம். தஞ்சை மாவட்டம் அயிலாடு துறை ஆதீனங்களைச் சார்ந்து காவிரியின் தென்கரையில் இவ்வாதீனம் அமைந்துள்ளது.

தென்பாண்டி நாட்டு ஸ்ரீ வில்லிபுத்தூரில் கார்காத்த சைவவேளார் மரபில் தோன்றிய ஸ்ரீ குருஞான சம்பந்தர் என்ற அருளாளரால் கி.பி 16ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தருமையாதீனம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்மொழி இலக்கியம், இலக்கணம், சமயம் போன்ற துறைகளில் இவ்வாதீனம் இயற்றி வந்திருக்கும் பணிகள்அளப்பரியன. ஸ்ரீ குருஞான சம்பந்தர் 8எட்டு நூல்களை அருளிச் செய்தார். சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா, முக்தி நிச்சயம் என்பன சிறந்த அருள் நூல்கள். இவ்வாதீன நான்காவது குருமூர்த்திகள் ஸ்ரீ மாசிலாமணி தேசிகர், ஸ்ரீ குமரகுருபரரின் ஞானாசிரியராகத் திகழ்ந்து பல அருள் நூல்களை அனார் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். பத்தாவது குருமூர்த்திகள் பதினாறு தோத்திர நூல்களை இயற்றினார். ஆதீன ஆதரவில் வளர்ந்த தமிழ்ப்புலவர்கள் பலரும் அரிய நூல்கள் பலவற்றை இயற்றி தமிழுக்கு வழங்கினார். ஸ்ரீ வெள்ளியம்பலவாணர் முக்தி நிச்சயப் பேருரை, ஞான வரைவிளக்கப் பேருரை, ஸ்ரீ சம்பந்த சரணாலய வடித்த கந்தபுராணச் சுருக்கம், படிக்காசுப் புலவர் இயற்றிய புள்ளிருக்கும் வேளூர்க் கலம்பகம் மற்றும் நூற்றுக்கு மேலான சைவச் சார்பு நூல்கள் சிறப்புடையன.

தருமை யாதீனம் தஞ்சை திருச்சிராப்பள்ளி மவட்டங்களில் திகழும் இருபத்து ஏழு திருக் கோயில்களைச் சிறப்பாகப் பரிபாலித்து வருகிறது. இத்திருக்கோயில்களை ஒட்டிப் பல அரிய தலப் புராணங்களும் சிற்றிலக்கியங்களும் எழுந்தன. காலத்தின் தேவை கருதி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் பல அரிய நூல்களை இவ்வாதீனம் சிறந்த முறையில் அச்சிட்டு இலவசமாகவும் அடக்க விலையிலும் வழங்கி வருகிறது.இதுவரை 800 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.திருக்குறள் உரைவளம், திருமுறை உரைப் பதிப்புகள், சைவ சித்தாந்த உரை நூல்கள் போல்வன குறிப்பிடத்தக்கன. நாற்பத்திரண்டு ஆண்டுகளாக ஹீஞானசம்பந்தம், என்ற அரிய திங்கள் இதழ் ஆதீனச் சார்பில் வெளிவருகின்றது. பார்வை நூலகம் பெறப்பட்ட இவ் வெளியீடு வாயிலாகப் பல்வேறு பல புதிய நூல்களும், உரைகளும், ஆய்வுகளும் தமிழ் உலகத்திற்கு கிடைத்து வருகின்றன.

தமிழ்க் கல்வி வளர்ச்சி நோக்கில் ஆதீனச் சார்பில் 1946 முதல் தமிழ்க் கல்லூரியொன்றும் நடைபெற்று வருகின்றது. சிறந்த தமிழறிஞர்கள் பலரும் இங்கே

ஈசுவரனுடைய பக்தி இல்லாதபடியால்தான் மனிதன்
வெகுவாகத் துன்பத்திற்குள்ளாகின்றான்.

பணியாற்றியுள்ளனர். ஆதீனம் 18 மொழிகளில் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட நூல்களைக் கொண்ட நூலகமொன்றைப் பராமரித்து வருகிறது. தமிழகத்து நல்லறிஞர்கள் பலருக்கும் ஆதீனம் பட்டங்கள் வழங்கி அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு ஊக்கமூட்டி வருகிறது. பலர் ஆதீனப் புலவராக விளங்கித் தமிழ் வளர்த்து வருகின்றனர். தேவாரம் பயிற்றுவிக்க ஒரு பாடசாலையும் இங்கே நடைபெற்று வருகின்றது.

தமிழ்த்திருமுறை வாணர்களுக்கு ஆண்டு தோறும் சீர்காழி மற்றும் திருவாமூரில் பட்டமளித்துப் பணமுடிப்பும் வழங்கப் படுகின்றது. சென்னையில் சமயப் பிரகார நிலையம் நிறுவித்தமிழும் சைவமும் தழைத்து இனிதோங்க நற்பணிகள் பலவற்றையும் இவ்வாதீனம் ஆற்றி வருகின்றது.

ஆதீனம் சமய-சாஸ்திரத் தமிழ் மாநாடுகளை அவ்வப்போது நிகழ்த்தி வருகின்றது. ஆதீனத் திருக்கோயில்களில் திருமுறைப் பெருவிழாக்களும், சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்படுகின்றன. ஆதீனப் பல்கலைக் கல்லூரியுடன் சைவசித்தாந்தக் கல்லூரியொன்றும் நடைபெற்று வருகின்றது. தமிழ் இசைவாணர்களும் கலைஞர்களும் ஆதரிக்கப்படுகின்றனர். ஸ்ரீ குரு ஞன சம்பந்தர் பணிமன்றம் என்ற அமைப்பும் அண்மையில் தொடங்கப் பெற்ற சைவ-சித்தாந்த மேல்நிலையாராய்ச்சி மையமும், சமூக-சமயப் பணிகளாற்றி வருகின்றன.

தமிழ்ப் பரிசுகள் பலவற்றை வழங்கி ஊக்கமூட்டி வரும் தருமையாதீனத்தைத் தற்போது புரந்துவரும் 26வது குருமூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சிறந்த தமிழறிஞராகத் திகழ்பவர்கள். இவர்கள் ஆட்சிக்காலத்தில் ஆதீனம் தமிழ் வளர்ச்சியில் அரும் பணிகள் பல ஆற்றி வருவது குறிக்கத்தக்கது.

## திருப்பானந்தாள் மடம்:-

இம்மடம், கி.பி 1726 இல் ஸ்ரீ காசிவாசி தில்லைநாத சுவாமிகளால் நிறுவப்பட்டது. இவரும் இவருக்கு முன்னிருந்த ஐந்து பெரியவர்களும், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் காசி மாநகரில் நிறுவிய குமாரசாமி மடத்தில் இருந்தவர்கள். அம்மடம் இப்போது ''காசி மடம'' என அன்போடு வழங்கப்படுகின்றது. அம்மடத்தின் தொடர்பாக ஆடுதுறை இரயிலடியிலிருந்து ஏழு கால் தொலைவில் உள்ள திருப்பனந்தாளில் ஒரு மடம் நிறுவப்பட்டதால் இம் மடத்திற்குத் திருப்பனந்தாள் ''காசி மடம்'' என்னும் பெயர் ஏற்பட்டது. குமரகுருபரை அவர் காலத்து ஆதரித்தவர், அப்போதைய தருமபுர மடத்தின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர். எனவே இதனைத் தருமபுரத்தின் சிஷ்யமடம், என்றும் வழங்குவர். இன்னும் தருமையாதீன கர்த்தரே இம்மடத்திற்குத் தலைவரை நியமித்து வருகிறார்.

இப்போது இம்மடத்தினைத் தலமைதாங்கிச் சிறப்புற நடாத்தி வரும் சைவப் பெரியார், ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் என்பவர். இவர் சைவமும் தமிழும் தழைத்தோங்க அளப்பரிய தொண்டு செய்துள்ளார்கள். திருப்பனந்தாளில் தமிழ்ப் புலவர் கல்லூரி ஒன்றையும் ஸ்ரீ வைகுண்டத்தில் ஒரு கலைக் கல்லூரியினையும், ஓர் உயர் பள்ளியினையும் நிறுவியுள்ளனர். தேவாரப் பாடசாலைகளும் மருத்துவ மனைகளும் ஏற்படுத்துயுள்ளனர். திருக்கோவில்களில் தேவாரத்திருப்பதிகப் பாடல்களைச் சலவைக் கற்களில் பொறித்து வைத்துள்ளனர். ''சிவசிவ'' என்ற மின்விளக்குகளையும் சிற்சில கோயில்களில் பொறித்துள்ளனர். இம் மடத்தின் தலைவராய் முன்னர் இருந்து மறைந்த ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாதர் சுவாமிகள் சென்னைப் பல்கலைக் கழகத்து வித்துவான் தேர்வில் முதன்மை பெறுபவர் ஆயிரம் ரூபாய் பரிசு பெறும் வண்ணம் நிலையான ஏற்பாட்டைச் செய்துள்ளார்கள். மேலும் குமரகுருபர

ஜீவாத்மாவானது பிரம்மமாகிய சமுத்திரத்தில்
மூழ்கும்போது தன்னுடைய எல்லையுட்பட்ட
தனித்தன்மையை இழக்கின்றன.

சிவஞான முனிவர் பாண்டிநாட்டு விக்கிரம சிங்க புரத்திலே ஆனந்தக் கூத்தர்க்கும் மயிலம்மைக்கும் மகவாய்த் தோன்றி எண்ணற்ற நூல்களைத் தந்தார். யமகம், திரிபு என்னும் சொல்லணிகளை விளக்கும் முல்லைவாயிலந்தாதி, திருக்குறட் செய்யுளுக்கு உதாரணச் செய்திகளைக் கூறும் சோமேசம் முதுமொழி வெண்பா, கற்பனை வளம் மிகுந்த அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் உருக்கமான பாடல்களைக் கொண்ட கல சையந்தாதி, காஞ்சிப் புராணம் முதலியன இவர் இயற்றிய நூல்களாகும். இவர் நன்னூலுக்கும் உரை கண்டுள்ளார். இவரது ''தொல்காப்பிய சூத்திர விருத்தி'' சிறந்த ஆய்வு நூலாகும். ''திராவிட மாபாடியம்'' என்னும் சிவஞான போதத்திற்கு எழுதிய உரை இவருடைய பெயரை என்றும் இவ்வுலகில் வாழவைப்பதாகும்.

## தருமபுரமடம்:

தமிழகத்தில் மூவேந்தர் ஆட்சி நிறைவுற்ற பிறகு தமிழ் வளர்க்கும் பொறுப்பில் சைவ ஆதீனங்கள் பெரும் பங்கு வகித்தன. சித்தாந்த சேவை வளர்க்கும் நோக்கில் கிளைத்த இவ் வாதீனங்கள் தமிழுக்கு ஆற்றியிருக்கும், ஆற்றிவரும் பணிகள் குறிக்கத்தக்கன. தமிழகத்துச் சைவ ஆதீனங்களிற் திருக்கையிலாயத் திருமரபில் மெய்கண்ட சந்தானத்தில் விளங்கி வருவது தருமபுர ஆதீனம். தஞ்சை மாவட்டம் அயிலாடு துறை ஆதீனங்களைச் சார்ந்து காவிரியின் தென்கரையில் இவ்வாதீனம் அமைந்துள்ளது.

தென்பாண்டி நாட்டு ஸ்ரீ வில்லிபுத்தூரில் கார்காத்த சைவவேளாளர் மரபில் தோன்றிய ஸ்ரீ குருஞான சம்பந்தர் என்ற அருளாளரால் கி.பி 16ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தருமையாதீனம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்மொழி இலக்கியம், இலக்கணம், சமயம் போன்ற துறைகளில் இவ்வாதீனம் இயற்றி வந்திருக்கும் பணிகள்அளப்பரியன. ஸ்ரீ குருஞான சம்பந்தர் 8எட்டு நூல்களை அருளிச் செய்தார். சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா, முக்தி நிச்சயம் என்பன சிறந்த அருள் நூல்கள். இவ்வாதீன நான்காவது குருமூர்த்திகள் ஸ்ரீ மாசிலாமணி தேசிகர், ஸ்ரீ குமரகுருபரரின் ஞானாசிரியராகத் திகழ்ந்து பல அருள் நூல்களை அனார் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். பத்தாவது குருமூர்த்திகள் பதினாறு தோத்திர நூல்களை இயற்றினார். ஆதீன ஆதரவில் வளர்ந்த தமிழ்ப்புலவர்கள் பலரும் அரிய நூல்கள் பலவற்றை இயற்றி தமிழுக்கு வழங்கினார். ஸ்ரீ வெள்ளியம்பலவாணர் முக்தி நிச்சயப் பேருரை, ஞான வரைவிளக்கப் பேருரை, ஸ்ரீ சம்பந்த சரணாலய வடித்த கந்தபுராணச் சுருக்கம், படிக்காசுப் புலவர் இயற்றிய புள்ளிருக்கும் வேளூர்க் கலம்பகம் மற்றும் நூற்றுக்கு மேலான சைவச் சார்பு நூல்கள் சிறப்புடையன.

தருமை யாதீனம் தஞ்சை திருச்சிராப்பள்ளி மவட்டங்களில் திகழும் இருபத்து ஏழு திருக் கோயில்களைச் சிறப்பாகப் பரிபாலித்து வருகிறது. இத்திருக்கோயில்களை ஒட்டிப் பல அரிய தலப் புராணங்களும் சிற்றிலக்கியங்களும் எழுந்தன. காலத்தின் தேவை கருதி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் பல அரிய நூல்களை இவ்வாதீனம் சிறந்த முறையில் அச்சிட்டு இலவசமாகவும் அடக்க விலையிலும் வழங்கி வருகிறது.இதுவரை 800 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.திருக்குறள் உரைவளம், திருமுறை உரைப் பதிப்புகள், சைவ சித்தாந்த உரை நூல்கள் போல்வன குறிப்பிடத்தக்கன. நாற்பத்திரண்டு ஆண்டுகளாக ஸ்ரீஞானசம்பந்தம், என்ற அரிய திங்கள் இதழ் ஆதீனச் சார்பில் வெளிவருகின்றது. பார்வை நூலகம் பெறப்பட்ட இவ் வெளியீடு வாயிலாகப் பல்வேறு பல புதிய நூல்களும், உரைகளும், ஆய்வுகளும் தமிழ் உலகத்திற்கு கிடைத்து வருகின்றன.

தமிழ்க் கல்வி வளர்ச்சி நோக்கில் ஆதீனச் சார்பில் 1946 முதல் தமிழ்க் கல்லூரியொன்றும் நடைபெற்று வருகின்றது. சிறந்த தமிழறிஞர்கள் பலரும் இங்கே

ஈசுவரனுடைய பக்தி இல்லாதபடியால்தான் மனிதன்
வெகுவாகத் துன்பத்திற்குள்ளாகின்றான்.

## திருவண்ணாமலை மடம்:

வீரசைவ மடமாய் விளங்கிய இம் மடம் சித்தாந்த சாத்திரங்களைப் பரப்புவதில் முன்னிற்கின்றது. திருவண்ணாமலையில் ஒரு குகையில் துறவு பூண்டு யோகியாய் வாழ்ந்தவர் குகைநமச்சிவாயர். அகமானத்தை ஆராய்கின்ற போக்கில் நூறு வெண்பாக்கள் கொண்ட அருணகிரி அந்தாதியை இவர் இயற்றியுள்ளார். இவருடைய மாணவராகிய ஆறுமுக சுவாமிகள் ' நிட்டானுபூதி' என்ற நூலினை வட நூலினின்றும் மொழி பெயர்த்தார். முத்துத் திருட்டிணப் பிரம்மம் என்பவர் இதற்கு உரைநடை வகுத்துள்ளார். ஈழநாட்டிலிருந்து வந்து திருண்ணாமலையில் துறவு பூண்ட சிவஞான சுவாமிகள், சிவஞான சித்தியாரின் சுபக்கத்திற்கு ஓர் உரை இயற்றியுள்ளார்கள்.

துறைமங்கலமடம் வீர சைவ மடமாய் விளங்கிச் சமயத் தொண்டு ஆற்றியது. இந்த மடங்களில் எல்லாம் கல்லூரிகளை நிறுவித் தமிழ் கற்பித்துள்ளனர்.. இதனால் தான் இலக்கிய இலக்கண நூல்கள் மக்களிடையே வாழ்ந்து வந்தன.புலவர்களும் தொடர்ந்து பெருகி வந்தார்கள். சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்கின.

*With Best Compliments From:*

**( S ) PRINT**

**4C.1, Fussels Lane,**
**Wellawatte, Colombo 6**
**T.P: 0777 - 645976**





